A/L 91
விலங்கியல்:
திரு. ஈசன்
திரு. ஞானம்
திங்கள்-வெள்ளி 4.30 மணி
தூய பிரயோக } கணிதம்
திரு. கிருஷ்ணு
சனி-ஞாயிறு 8.30 - 10.30 மணி
நிரு ரியூசன் சென்ரர், கோண்டாவில்.

பக்கங்கள்: ஆறு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ2/50

A/L 91
பௌதிகவியல்:
திரு. சௌந்தி
செவ் - வியா - 1.00 மணி
இரசாயனவியல்:
திரு. செல்வா
செவ் - வியா - 2.00 மணி
தாவரவியல்:
திரு. பாலா
சனி - ஞாயிறு 4.30 மணி
நிரு ரியூசன் சென்ரர், கோண்டாவில்.

சுடர்: 4 சுக்கில ஆண்டு வைகாசி மீ 10 உ. செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1409 ஷவ்வால் பிறை 17 (23 - 05 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:-142

## இலங்கை - இந்திய உறவில் சந்தேக நிலை?

### அரசியல் அவதானிகள் கருத்து

கொழும்பு, மே 23

இலங்கை — இந்திய அரசுகளுக்கு இடையே உத்தியோக மட்டத்தில் விரிசலும், சந்தேகிக்கும் நிலையும் உருவாகி இருப்பதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டிருப்பதாக ஏஜன்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கை அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்று வரும் பேச்சுக்கள் குறித்து கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்துக்கு வெளிப்படையாக எதுவும் கூறவில்லையாம்.

அதுவே விரிசல் நிலைக்கும், சந்தேகச் சூழ்நிலைக்கும் ஆரம்பக் கட்டமாக அமைந்தது என்று அரசியல் அவதானிகள் மேலும் கருத்து வெளியிட்டிருக்கின்றனர்.

இதேவேளை, வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இலங்கை ஆயுதப் படைகளின் செயற்பாடுஆரம்பித்துள்ளதா என்பதை மிக உன்னிப்பாகக் கவனிப்பதில் இந்தியா அதிக அக்கறை காட்டி வருவதாக

(6ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



எங்கடை பிள்ளைகளும் மயங்கி ஆஸ்பத்திரிக்குப் போகாமல் இருந்தால் சரிதான் பாருங்கோ......!

### இன்று மீண்டும் பேச்சு

கொழும்பு, மே 23

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையேயான பேச்சுவார்த்தைகள் மீண்டும் இன்று (செவ்வாய்) ஆரம்பமாகலாம் என்று தெரியவருகிறது. (ஒ-எ)

### திருமலை - மூதூர் படகுச் சேவைக்கு பாதுகாப்பு

யாழ்ப்பாணம், மே 23

திருகோணமலை — மூதூர் படகுச்சேவைக்கு படையினர் பாதுகாப்பு வழங்கி வருகின்றனர்.

மூதூர்ப் பகுதியில் நடைபெற்ற மோதல்களை அடுத்தே இந்தியப் படையினர் இந்தப் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். (ஒ-10)

### துணை மந்திரியின் சகோதரரும் மனைவியும் கொலை

கொழும்பு, மே 23

மகாவலி அபிவிருத்தித் துணை அமைச்சர் காமினி அத்துக்கோறளையின் சகோதரரும் அவரது மனைவியும் இனந்தெரியாதோரால் கடந்த புதன்கிழமை சுட்டுக் கொல்லப்பட்டனர்.

கஹவத்தைக்கும் பெல்மதுளைக்கும் இடையில் பத்தலந்த என்னும் இடத்தில் வைத்து இருவரையும் வானில் வந்த ஆயுதக் கோஷ்டி ஒன்று வழிமறித்துச் சுட்டது. (ஒ-எ)

### அரியாலை வாசி சுட்டுக் கொலை

யாழ்ப்பாணம், மே 23

அரியாலை புங்கங்குளம் பகுதியில் நேற்று இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

கொலையுண்டவர் அரியாலையைச் சேர்ந்த யோசப் கெனடி (வயது 23) என்பவராவர். (ஒ-10)

### காருடன் மூவர் எரிப்பு

கொழும்பு, மே 23

பெலியத்தை பொலீஸ் பகுதியில் தலகம என்னும் இடத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இனந்தெரியாத சிலர் மூவரை கார் ஒன்றினுள் போட்டு காருடன் தீ வைத்து எரித்துக் கொன்றனர்.

உயிரிழந்தவர்கள் நிமால், அனுரா, ஜயதாஸ ஆகியவர்கள் என்று பின்னர் அடையாளம் காணப்பட்டனர். (ஒ-எ)

### பிரெஞ்சு சிகிச்சைக்குழு

வடமராட்சி, மே 23

பிரான்ஸ்நாட்டைச்சேர்ந்த விசேட கண்சத்திரசிகிச்சைப் பிரிவு ஒன்று இன்று செவ்வாய்க் கிழமை மந்திகை ஆதார வைத்தியசாலைக்கு வருகிறது.

இந்தப் பிரிவு ஒரு வார காலம் வைத்தியசாலையில் தங்கியிருந்து கண் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க உள்ளது.

பிரெஞ்சு கண் சத்திரசிகிச்சைக்குழு ஒன்று வடமராட்சிக்கு வருகை தருவது இதுவே முதல் தடவையாகும்(க-160)

### விபத்தில் மாணவன் பலி

யாழ்ப்பாணம், மே 23

யாழ்ப்பாணம், கொன்வென்ட் சந்தியில் நேற்று பஸ்ஸும் மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளானதில் மாணவர் ஒருவர் மரணமானுர்.

மற்றொருவர் அறிவு மயங்

(6-ஆம் பக்கம் பார்க்க)

### பக்திமயமான சூழலில்

## நகரில் நேற்றுச் சிறப்புறு திருமுறைச் சுவடி ஊர்வலம்

யாழ்ப்பாணம், மே 23

வர்ண பகவான் மப்புப் போட்டு நிழல் தர, வீதிகளில் மக்கள் கூடி நின்று, பூரண கும்பம் வைத்து, மலர் தூவி வணங்க, பக்திமயமான சூழலில் நேற்றுக் காலை யாழ்ப்பாண நகரத்தில் திருமுறைச் சுவடிகள் ஊர்வலம் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, இந்து இளைஞர் கழகத்தின் திருமுறை மாநாட்டை ஒட்டியே திருமுறைச் சுவடிகள் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டன.

யாழ். இந்துக்கல்லூரி இந்து இளைஞர் கழகத்தின் திருமுறை மாநாடு நேற்றுக் காலை குமாரசாமி மண்டபத்தில் ஆரம்பமானது.

மாநாடு ஆரம்பமாகு முன்னர் வண்ணை வைத்தீஸ்வரர் தேவஸ்தானத்தில் இருந்து திருமுறைச் சுவடிகள் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டன. காலை 8.30 மணியளவில் ஆலயத்தில் இருந்து நாகசுர-தவில் முழங்க, பண்ணிசைக்க ஊர்வலம் புறப்பட்டது.

மாணவர்கள் சைவாசாரப்படி உடையணிந்து, திருமுறைகளை இசைத்தபடி, சைவ சின்னங்கள் கொண்ட சுலோக அட்டைகளைத் தாங்கி வந்தனர். திருமுறை மாநாட்டு அறிவித்தலும், நால்வர் படங்களைக் கொண்டதுமான பதாகைகள் முன்னே கொண்டு

(6-ஆம் பக்கம் பார்க்க)

### திக்கமுனையில் கிரனேட் வீச்சு

வடமராட்சி, மே 23

கடந்த ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை, திக்கமுனை இராணுவச் சென்றிமீது கிரனேட் வீசப்பட்டது.

இதனை அடுத்து படையினர் பதில் தாக்குதலில் ஈடுபட்டனர் என்றும் அப்போது ஷெல் தாக்குதலும் இடம் பெற்றது என்றும் சொல்லப்பட்டது.

இப்பகுதி மக்கள் பாதுகாப்புக்காக அவ்விடத்தை விட்டு அகன்றனர். (ஒ-160)

## வவுனியா உலுக்குளத்தில் புளொட் முகாம் மீது தாக்குதல்!

### 42 பேர் உயிரிழப்பு என அறிவிப்பு

வவுனியா, மே 23

வவுனியா உலுக்குளத்தில் இருந்த "புளொட" இயக்க முகாம் ஒன்றின் மீது கடந்த சனிக்கிழமை தாக்குதல் நடத்தப்பட்டது. தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய இத் தாக்குதலில் "புளொட்" இயக்கத்தைச் சேர்ந்த 42 பேர் உயிரிழந்தனர் என்றும் விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த 11 பேர் மரணமாஞர்கள் என்றும் அறியவந்தது.

இதே வேளை இலங்கை இராணுவ வட்டாரங்களை ஆதாரங்காட்டி கொழும்பில் உள்ள பி. பி. சி. செய்தியாளர் கிறிஸ் நட்டால்தாக்குதல் சம்பவம் நடந்த போது "புளொட்" முகாமினுள்150 புளொட் உறுப்பினர்கள் இருந்தனர் என்றும் அந்த முகாம் மீது தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கப் போராளிகள் திடீர் தாக்குதலை நடத்தினர் என்றும் தெரிவித்திருந்தார்.

இதேவேளைசனிக்கிழமைவவுனியாவில் குழுஒன்றின் முகாம் மீது தாம் நடத்திய தாக்குதலில் 42 பேர் கொல்லப்பட்டதாகவும், தமது தரப்பில் 11 பேர் உயிரிழந்ததாகவும் தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கின்றனர்.

தங்களது தரப்பில் கப்டன்கள் சபேசன், அமலன், குலம், புதுவை, லெப்டினன்ட்டுகள் நாயுடு, மார்க், 2 ஆம் லெப்டினன்ட்டுகள் சுரேஷ், சிவம், வர்மன், மற்றும் பீற்றர், வீமன் ஆகியோர் உயிரிழந்த

(6ஆம் பக்கம் பார்க்க)

## இறைச்சிக் கடைக்காரர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும்

### நேற்றைய கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம், மே 23

யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட உத்தரவு பெற்ற இறைச்சிக்கடை உரிமையாளர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும்.

யாழ் மாவட்ட இறைச்சிக் கடைவியாபாரிகள்சங்க உறுப்பினர்கள் நேற்றுயாழ்முஸ்லிம் வீதியில், தலைவர் எஸ். எம். ஏ. கலீம் தலைமையில் கூடிய போது மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேற்படி இறைச்சிக்கடைகள் கடந்த மாதம் 22 ஆம் திகதிமுதல் உதவி உள்ளூராட்சி ஆணையாளரின் உத்தரவைத் தொடர்ந்து மூடப்பட்டுள்ளன.

இறைச்சிக்கடைகள் மூடப்பட்டதால் ஏற்பட்ட பாதிப்புகளை ஆராயும் பொருட்டே இக் கூட்டம் கூடப்பட்டது.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு:-

★ சட்ட விரோத அங்காடி வியாபாரிகளால் எமது வியாபாரம் பாதிக்கப்பட்டுள்ளது. இதனுல் கோரப்படும் கேள்வித் தொகையில் சலுகை அடிப்படையில் விதிவிலக்கு அளிக்க வேண்டும்.

★ உத்தரவு பெற்ற இறைச்சிக்கடைகளைத் திறப்பதற்கு முன் சகல சட்ட விரோத இறைச்சிக்கடைகளும் மூடப்படவேண்டும். (ஒ-10)

### சுபநேரம்

வைகாசி 10
செவ்வாய்க்கிழமை
சுபநேரம்;
10.22 முதல் 11.52 வரை
ராகுகாலம்;
02.52 முதல் 04.22 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
திருஞானசம்பந்தர் குருபூஜைத்தினம்

## வடமராட்சிப் பகுதிக்கு அடிக்கடி ஸ்ரீலங்கா ஹெலிகள்!

வடமராட்சி, மே 23

நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் வடமராட்சிப் பகுதியில் அடிக்கடி ஸ்ரீலங்கா ஹெலிக்கொப்டர்கள் முகாமுக்கு வருவதும் போவதுமாக இருக்கின்றன.

ஸ்ரீலங்கா 'ஹெலி'களை முன்னர் கண்டால் ஓடி ஒளிக்கும் மக்கள் இப்போது வெகு சுவாரஸியமாக மேலே கூர்ந்து பார்த்து அவதானிப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

அவை 'ஸ்ரீலங்கா ஹெலி' என்பதையும் அவர்கள் அடையாளம் கண்டுகொள்கிருர்கள்.

ஸ்ரீலங்கா இராணுவ முகாமுக்கு (வல்வெட்டித்துறை) அந்த ஹெலிகள் அடிக்கடி வந்து போவதால், மக்கள் அது குறித்து பலவித ஊகங்களையும் சொல்லிக்கொள்கின்றனர். (ஒ-160)

## மூதூர், கிண்ணியாவில் தொடர்ந்து ஊரடங்கு

யாழ்ப்பாணம், மே 23

மூதூர், கிண்ணியாப் பகுதிகளில் ஊடரங்குச் சட்டம் தொடர்ந்தும் அமுல்படுத்தப் பட்டுள்ளது.

திருகோணமலையில் இருந்து கிண்ணியாவுக்கான பஸ் போக்குவரத்தும் இதனுல் நிறுத்தப்பட்டுள்ளது.

மூதூரில் இடம்பெற்ற அசம்பாவிதங்களின் போது காயமடைந்த பலரும் மூதூர், திருகோணமலை வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மூதூரில் தற்பொழுது நிலைமை கட்டுப்பாட்டில் இருக்கிறது. பாதுகாப்புப் படையினர் தீவிர ரோந்துப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். (ஒ-10)

## யாழ். பாடசாலைகளில் இன்று மதிய போசனம்

### தாமதித்தால் நஷ்டம் நம்மவர்க்கே!

யாழ்ப்பாணம் மே 23

யாழ். மாவட்டப் பாடசாலைகள் அனைத்திலும் இன்று முதல் மதிய போசனத் திட்டம் அமுல்படுத்தப்பட உள்ளது.

இம்மாதம் 15 ஆம் திகதிக்கு முன் சகல பாடசாலைகளிலும் மதிய போசனம் வழங்கும் திட்டத்தை ஆரம்பித்துவிட வேண்டும் என யாழ். கல்வித் திணைக்களம் பணித்திருந்தது.

ஆயினும் கடந்த வாரம் பாடசாலைகள் இயங்காததன் காரணமாக இது சாத்தியப்படாமற் போய்விட்டது.

மதிய போசனம் வழங்குவதில் தாமதம் காட்டுவதால் ஏற்படக்கூடிய விளைவுகளைக்

(6ஆம் பக்கம் பார்க்க)

## சகல தமிழ்க் கைதிகளும் ஜூன் இறுதிக்குள் விடுதலை?

கொழும்பு, மே 23

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள சகல தமிழ்அரசியல் கைதிகளையும் அடுத்த மாத இறுதிக்குள் விடுவிக்க ஜனுதிபதி தீர்மானித்துள்ளார் என்று கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

ஏற்கனவே நீதிமன்றத்தால் தண்டனை விதிக்கப்பட்டுள்ளவர்களும் இவ் விடுதலைக்குத் தகுதி உடையவர்களாக இருப்பர் என்றும் அறிய வருகிறது.

எஞ்சியோரை விடுவிப்பது தற்சமயம் நடைபெற்றுவரும் இலங்கை அரசு — விடுதலைப் புலிகள் இயக்கப் பேச்சுக்களின் முன்னேற்றத்துக்கு துணை புரியும் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-எ

## கப்புதூவில் அசம்பாவிதம்

கரவெட்டி, மே 23

நேற்றுக் காலை கப்புதூப் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

யார்க்கரு முகாமுக்கு அண்மித்த இந்தப்பகுதியில் சரமாரியான துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்ட சத்தங்கள் கேட்டன. இதனுல் இப்பகுதியில் பதற்றம் நிலவியது.

சிலர் விசாரணைக்காக கூட்டிச் செல்லப்பட்டு, பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

சேத விவரம் தெரியவரவில்லை. (ஒ-70-160]

## பீகிங் நகருக்குள் கவசவாகனங்கள் புகமுயற்சி

சீனஇராணுவ வீரர்களுடன் சில கவச வாகனங்கள் நேற்று பீகிங் நகருக்குள் நுழைய முயற்சித்தன.

அவற்றை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த மாணவர்கள், மற்றும் பொது மக்கள் தடுத்து நிறுத்தினர்.

இதனிடையில் பிரதமர் பதவியை திரு. லீபெங்கும் ராஜினுமாச் செய்துவிட்டதாக வதந்திகள் பரவின.

நேற்று நடந்த ஆர்ப்பாட்டத்தில் மாணவருடன் பத்திரிகையாளர்களும் ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.

பிரதமர் லீபெங் கைது செய்யப்பட வேண்டும் என்றும் அவர்கள் கோஷம் எழுப்பினர். (ஒ-எ)

## நிலாவெளிப் பகுதியில் தமிழர் பலர் சுட்டுக் கொலை?

யாழ்ப்பாணம், மே 23

திருகோணமலை, நிலாவெளியில் கடந்த சனிக்கிழமை தமிழர்கள் பலர் சுட்டுக் கொல்லப்பட்டனர் எனத் தெரியவருகிறது

கோவில் திருவிழா ஒன்றுக்குச் சென்றுவிட்டுத் திரும்பி வருகையிலே அவர்கள் இனந்தெரியாதோரினுல் வழிமறிக்கப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டதாக அறியவருகிறது.

சுமார் 17 பேர் வரையில் சுட்டுக் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்ட போதிலும் அதனை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை.

இச் சம்பவத்தை அடுத்து இப் பகுதி மக்கள் பெரும் அதிர்ச்சியும் பீதியும் அடைந்து வேறிடங்களுக்கு இடம் பெயர்ந்து சென்றுகொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி அசம்பாவிதத்தில் மரணமானவர்களின் இறுதிச் சடங்குகள் நேற்று நிலாவெளியில் நடைபெற இருந்ததாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ஒ-10]

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

P. B. D. இன்டஸ்றீசாரின் தயாரிப்புக்களான றெயிங் புக் வெளிக்களப் புத்தகம், மொனிற்றேஸ்புக், நோட்புக், லெஜர்புக், சயன்ஸ் றெக்கோட்புக் அனைத்தும் நல்ல முறையில் தயாரிக்கப்பட்டு விற்பனையாகின்றன. கல்லூரிகள், ஆசிரியர்கள், வியாபாரிகள் அனைவருக்கும் மொத்த விலையில் கிடைக்கும். தொடர்பு: பூபாலசிங்கம் புத்தகசாலை [புத்தக களஞ்சியம்] யாழ்ப்பாணம். (சி/2510)

Honda Reconditioned, புதிய, பழைய Model C90, C 50, Chaly, M. D 90 மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்கு உண்டு. Anton Enterprises, 390, மெயின்வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (11027)

முந்திரிகைத் தோட்டத்துக்கான நல்ல நிலையில் உள்ள தூண்கள் (சீமெந்து) இழுவைக் கம்பிகளும் மற்றும் நல்லினப் பால் பசுக்கள், கன்றுகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: மோகனதாஸ், வளாக வீதி, திருநெல்வேலி. (புதன் கிழமையும், வியாழக் கிழமையும். 9.00 — 12.00 மணி வரை சந்திக்கலாம்.) [11018]

பூரண விளைத்திறன் உடைய பம்பாய் வெங்காய விதை விற்பனைக்கு உண்டு. Country of Origan Holland பிள்ளையார் 259, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். (555)

காட்டு விறகு விசேஷ மலிவு விற்பனை தூக்கு 55/- பத்து தூக்கு 500/ ஜயப்பன் விறகு டிப்போ 81, செட்டித்தெரு, நல்லூர். [11003]

எம்மிடம் இரும்பு 13 அடி நீளம், 8 அடி உயரம், 3 டைமன்ட் போடப்பட்ட இரும்புகேட், பழயஓடு, பழைய தரம், ஏனைய பாவித்த பொருட்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: சின்னவி கந்தசாமி, நவாலி வடக்கு, நாச்சிமார் கோவிலடி, மானிப்பாய். (11016)

முட்டைக் கோழிகள் விற்பனைக்கு உண்டு. [Cull Birds] கிலோ 48 ரூபா. தொடர்பு: 39/5, இராசாவின் தோட்ட வீதி, யாழ்ப்பாணம். [11013]

## காணி விற்பனை

கோண்டாவில் இருபாலை வீதியில் மின்தறி ஆலைக்கு முன்னால் 20 பரப்புத்தோட்டக் காணி விற்பனைக்குண்டு. பகுதியாகப் பிரித்தும் கொடுக்கப்படும். விபரங்களுக்கு:- திருமதி வி. சிவசுப்பிரமணியம் C/o இ. முருகையா, புகையிரத வீதி, கோண்டாவில் மேற்கு. (545)

## கோழிக்குஞ்சு விநியோகம்

பிறவுண் சேவற்குஞ்சுகள் 100க்கு மேல் விலை 3/50, 250க்கு மேல் விலை 3/00, முழுப் பணமும் முன்கூட்டியே செலுத்தி பதிவு செய்க. சற்குணராஜா & பிறதர்ஸ் பிரம்படிலேன், கொக்குவில். [350]

## கோழிக்குஞ்சு விநியோகம் UPLANDS FARM

(Dekalb) பிறவுண் பேடு சேவல் குஞ்சுகள், கறுப்பு சேவல் குஞ்சுகள் (C hb) புறொயிலர் குஞ்சுகள் (23 5-89) செவ்வாய் கிழமை விநியோகம் [illegible] பிறவுண் சேவல் குஞ்சுகள் 50க்கு மேல் எடுப்பவர்களுக்கு விலை ரூ3/50. முன்கூட்டியே பதிவு செய்க. இல: 9, கந்தையா லேன், சுன்னாகம் (புகையிரத நிலையத்திற்கு அண்மையில்) (551)

## தொலைந்து விட்டது

30/1 மலர்மகள் வீதி, அரியாலையில் வசிக்கும் ஆறுமுகம் துரைராசா ஆகிய எனது காப்புறுதிக் கூட்டுத்தாபன (பொலிசி) கா. பொ. எண் 31126 பத்திரம் அண்மையில் ஏற்பட்ட அசம்பாவிதத்தின் போது தொலைந்து விட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் விலாசத்தில் ஒப்படைக்கவும் (11022)

## தேவை

நல்ல நிலையிலுள்ள முழு அளவு மிருதங்கம் அவசரம் தேவை. தொடர்பு கொள்ளவும்: மே/பா, பரம் ஏஜன்சி, கிளிநொச்சி. [568]

கணக்கு வைப்பு முறையில் நிறைந்த அனுபவம் உடைய எழுதுவினைஞர்தேவை. சொந்தக் கையெழுத்தில் முன்அனுபவம், கல்வித்தகைமை ஆகியவற்றுடன் எதிர்பார்க்கும் மாதவேதனத்தையும் குறித்து 25 – 05 – 89 திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும். 520, C/o உதயன், யாழ்ப்பாணம். (சி-2584)

## வாடகைக்கு தேவை

யாழ். நகர பகுதியில் தொழில் செய்யும் ஒருவருக்கு சகல வசதிகளையும் [உணவு தவிர்ந்த] கொண்டஓர் அறை வாடகைக்கு தேவை. உடன் தொடர்பு கொள்க. C/o, 529, உதயன், யாழ்ப்பாணம். [566]

## FOR SALE

புத்தம் புதிய வீடியோ கமெரா விற்பனைக்கு உண்டு. Panasonic NV MSI(S-VHS Movie) தொடர்பு கொள்ளவும்: கே. கே. எலற்றோனிக்ஸ் 27, மின்சார நிலையவீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [சி/2619]

## தவறிவிட்டது

683120190V சி. மனோகரனின் அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கிளிநொச்சி டிப்போ, அல்லது அம்பிகா டிஸ்பென்சறி, சாவகச்சேரியில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். [565]

## வாடகைக்கு

எங்களுடைய மேல்மாடியில் காரியாலயம், களஞ்சியம் போன்ற பாவனைக்கு சகல வசதிகள் கொண்ட அறைகள் வாடகைக்கு உண்டு. காலை 9 மணி முதல் 11 மணிவரை விபரங்களுக்கு நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளவும். யாழ் சைனீஸ் றெஸ்ரோரன்ற் (Pvt) Ltd, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். [365]

## NEW CITY TRADERS

Daytron T. V 12'', 14'' B & W 14'', 20'' கலர் Phillips 20'' Gas cooker, Hotplate, Booster, T. V Antennas Pipe fan& றேடியோ வீடியோ கசெற் ரெக்கோடர் ஓடியோ வீடியோ கசெற், Head, T.V stand, Film roll சுவர், கை மணிக்கூடுகள் மற்றும் ஆடம்பரப் பொருள்களுக்கும் New City Traders 135, Kasturlar Road, Jaffna. [சி/2505]

## மணமகன் தேவை

யாழ். சைவ வேளாள குல 31 வயது உடைய வெளிநாட்டு வங்கியில் பணிபுரியும் செவ்வாய்க்குற்றமற்ற பெண்ணுக்கு வங்கி– அரச தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் அல்லது வெளிநாட்டில் நிரந்தர வேலை உடைய மணமகன் தேவை தொடர்பு: ஐ நடராசா, 90/2, சிவன் பண்ணை வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம் [567]

## மணமகன் தேவை

இந்து வேளாள 30 வயது O/L படித்த சிவந்த கன்னிப் பெண்ணுக்கு ஒழுங்கான கன்னி மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர் யாழ்ப்பாணம் பஸ்நிலையம் – நாவலர் வீதி, [1/2மைலுக்குள்] வீடும், குறிப்பிடத்தக்க பணமும் நகையும். முதல்கடிதத்தில் சகல விபரத்துடனும் தொடர்பு கொள்க: 528, C/o உதயன், யாழ்ப்பாணம் [564]

## நிரந்தர அதிபர்

யாழ்ப்பாணம், மே 23

கடந்த ஒன்றரை வருடங்களாக நிரந்தர அதிபர் இல்லாதிருந்த புங்குடுதீவு ஸ்ரீசித்தி விநாயகர் வித்தியாலயத்துக்கு மே 15 ஆம் திகதியிலிருந்து நிரந்தர அதிபராக திரு. கா. கனகசபை நியமிக்கப்பட்டுள்ளார். (க)

தமக்குக் கீழ் உள்ள சகல பாடசாலைகளும் நலன் பெற

# கொத்தணி அதிபர்கள் திட்டமிட்டு செயற்பட வேண்டும்

## பிரதிக் கல்விப் பணிப்பாளர் உரை

மானிப்பாய், மே 23

கொத்தணிப் பாடசாலை அதிபர்களுக்குப் புதிய பல கடமைகள் உள. இதுவரை இயங்கிவரும் கொத்தணிகளில் பல அதிபர்கள் தமது பாடசாலைகளுக்கே அதிக கவனம் செலுத்தி வருவதாகவும் அக்கொத்தணிக்குக்கீழ் இயங்கும் பாடசாலைகளில் கவனம் எடுப்பதில்லை எனவும் குறை கூறப்படுகிறது. தமக்குக்கீழ் உள்ள சகல பாடசாலைகளும் நலன் பெறக்கூடிய முறையில் கொத்தணி அதிபர்கள் திட்டமிட்டுச் செயற்படவேண்டும்.

மருதனமடக் கோட்டக் கல்வி அலுவலகத்தை உத்தியோக பூர்வமாகத் திறந்து வைத்து உரையாற்றிய யாழ்ப்பாணப் பிரதேசப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி இவ்வாறு கூறினார்.

மருதனமடம் இராமநாதன் கல்லூரியில் அமைந்துள்ள கோட்டக்கல்வி அலுவலகப் பெயர்ப்பலகையை நீர்வேலி கொத்தணி அதிபர் திரு. கனகசுந்தரம் திரை நீக்கம் செய்தார்.

திறப்புவிழாவை அடுத்து நடைபெற்ற பொதுக் கூட்டத்துக்குக் கோட்டக்கல்வி அதிகாரி திரு. இ. க. குலசேகரம் தலைமைவகித்தார்.

யாழ்ப்பாணக் கல்வித் திணைக்கள பிரதம கல்வியதிகாரிகள், கல்வியதிகாரிகள், உயரக அதிகாரிகள், கோட்டக்கல்வி அலுவலர்கள், கொத்தணி அதிபர்கள், ஆசிரியர்கள் உட்படப் பலர் திறப்புவிழாவில் பங்குகொண்டனர்.

இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி எஸ். எஸ். குமாரசாமி வரவேற்புரை நிகழ்த்தினார்,

பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி கூறியதாவது:–

கோட்டக்கல்வி அலுவலகங்களுக்கு அதிகாரங்கள் வழர்கப்படாவிட்டாலும் பலரின் நலன்கருதி மிக அவசியமானதெனக் கருதப்பட்டு, கொத்தணி அதிபர்கள், ஆசிரியர்களின் சம்மதத்துடன் எடுக்கப்படும் எந்த நடவடிக்கைக்கும் நான் இடைஞ்சலாக இருக்கமாட்டேன்.

பாடசாலைகள், கொத்தணிகள், கோட்ட அலுவலகங்கள், பிரதிக்கல்விப் பணிப்பாளர் செயலகங்கள் என்ற அடிப்படையில் திட்டமிடல் சேவைகள்—மேற்பார்வை ஆகியன சிறப்பாகநடைபெற உங்கள் ஒத்துழைப்பு அவசியமானது.

இப்படி அவர் கூறினார்.

சிறப்புரை வழங்கி உரையாற்றிய யாழ்ப்பாணக் கல்வித்திணைக்களப் பிரதம கல்வி அதிகாரி திரு. க. கந்தசாமி கூறியதாவது;-

கல்வித் திணைக்களத்தில் மட்டுமல்ல ஏனைய திணைக்களங்களிலும் அதிகாரப் பரவலாக்கம் நடைபெற்று வருகின்றது.

வேலைப்பழு காரணமாகக் கந்தோர்க் கோவைகளை வீட்டில்கொண்டுசென்று வேலைகளை முடித்துவந்த காலமும் உண்டு. வேலைப்பழுவைக் குறைப்பதற்கு அதிகாரப்பரவலாக்கம் அவசியமாகிறது;

கோட்ட அலுவலகங்கள் மூலம்–செயற்படும்போது வீணாக அலைந்து திரியும்நேரம் தவிர்க்கப்படுகிறது,

பாடசாலைகளைப் பராமரிக்கும் வேலைகளை கோட்டஅலுவலகங்கள் மூலம் கவனிப்பது இலகுவானது, பாடசாலைமுகாமைத்துவ, கலாசாரங்களைப்பேணி, பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளவே கொத்தணி, கோட்ட அமைப்பு முறைகள் உருவாக்கப்பட்டன.

இப்படி அவர் கூறினார்.

பிரதம கல்வி அதிகாரி திரு. ஆ. தங்கராசா பேசுகையில் அரசியல் ரீதியான பரவலாக்கம் மக்களின் நலன்கருதியும், கல்வியில் பரவலாக்கம் மாணவர் நலன்கருதியும் செய்யப்பட்டு வருகின்றன என்றார்.

தலைமையுரையின் போது கோட்டக்கல்வி அலுவலர் திரு. இ. க. குலசேகரம் பேசுகையில் கல்வித்துறையில்மேற்கொள்ளப்படும் மாற்றங்கள் மிக அபாயகரமானவை; மிகக் கவனமாக அவை செயற்படுத்தப்படாவிடின் ஒரு சந்ததியே அதனால் பாதிப்படைய நேரிடும் என்றார்.

கோப்பாய் கொத்தணிப் பாடசாலைகள் அதிபர் திரு. பூ. க. இராசரத்தினம், புத்தூர் கொத்தணி பாடசாலைகள் அதிபர் திரு. நா. கணேசபிள்ளை, உடுவில் மகளிர் கல்லூரி ஆசிரியை திருமதி எஸ். வி. எல். மில்ஸ், தெல்லிப்பளை கூட்டுறவு மொத்த வியாபார நிலையத்தலைவர் திரு எஸ். சிவமகாராசா உட்படப் பலரும் உரையாற்றினர். [இ-90]

# கம்பியூட்டர் யுகத்துக்கேற்ப மக்களைதயார்செய்யவேண்டும்

யாழ்ப்பாணம், மே23

'வேகமாக வளர்ந்துவரும் கம்பியூட்டர் யுகத்துக்கு மக்களைத் தயார்படுத்தும் வகையில் மென்மேலும் சிறப்பான கருத்துக்களைக் கொண்டதாக கம்பியூட்டர் சஞ்சிகைஅமைய வேண்டும்'.

ஐ. பி. டி. கம்பியூட்டர் ஸ்தாபனத்தின் மாதாந்த வெளியீடான கம்பியூட்டர் சஞ்சிகையின் ஐந்தாவது இதழின் வெளியீட்டு வைபவத்தின்போது உரையாற்றிய வடமாகாண கம்பியூட்டர்சங்கத்தின் தலைவரும் யாழ். பல்கலைக்கழகத்தின் பகுதிநேரக் கம்பியூட்டர் விரிவுரையாளருமாகிய திரு. எஸ். ஞானசுந்தரம் மேற்கண்டவாறு கூறினார்.

இந்த நிகழ்ச்சிக்கு விரிவுரையாளர் ரி. சந்திரகுமார் தலைமைவகித்தார்.

சஞ்சிகையின் முதல் பிரதியை இயக்குநர் திரு. வி. செல்வரட்ணமும், இரண்டாவது பிரதியை விரிவுரையாளர் ரி. சூரியகுமாரும் பெற்றுக் கொண்டனர்.

ஐ. டி. பி. நிறுவன மாணவி செல்வி என். ரூபி, சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் கி. சிறீரங்கன் ஆகியோரும் நிகழ்ச்சியில் உரையாற்றினார்கள். (க-6)

# பொ. ஜ. சங்க அபிப்பிராயம் கோரப்படுகிறது

காங்கேசன்துறை. மே 23

வலி-வடக்கு பிரதேசசபை எல்லைக்குள் மேற்கொள்ளப்படவேண்டிய பொதுசன நல்லாக்க வேலைகள் குறித்து பொதுசன சேவா சங்கங்களிடம் அபிப்பிராயங்கள்கோரப்பட்டுள்ளன.

உள்ளூராட்சித் திணைக்களத்தின் மூன்றுண்டு அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் வலி_வடக்குப் பிரதேசசபை எல்லைக்குள் பல்வேறு அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

வலி-வடக்கு பிரதேச சபையின் செயலாளர் திரு: வி. இராசையா இது குறித்து இப்பகுதியில் உள்ள கிராம அபிவிருத்திச்சங்கங்கள், சனசமூக நிலையங்கள் மற்றும் பொதுசன சேவா சங்கங்களின் பிரதிநிதிகளை அழைத்து விளக்கம் அளித்துள்ளார்.

அத்துடன் கிராம ரீதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி வேலைகள்குறித்து இம்மாதம் 29 ஆம் திகதிக்கு முன்னர் தமக்குத் தெரியப்படுத்துமாறும் பொதுசன சேவா சங்கங்களிடம் கோரியுள்ளார். (இ-68)


உ
சிவமயம்

3ஆவது கோலாலம்பூர், பாங்கக், சிங்கப்பூர் சுற்றுலா

ஆரம்பம்: 15- 7- 89 முடிவு 24- 07- 89

120 ஆவது

தென் இந்திய யாத்திரை சுற்றுலா

ஆரம்பம்: 20- 8- 89 முடிவு: 8- 9- 89

17ஆவது வடஇந்திய காசி யாத்திரை காஷ்மீர் சுற்றுலா

ஆரம்பம் 7- 9- 89 முடிவு: 3-10-89

விபரங்களுக்கு;

★ விநாயகா டூர்ஸ் ★

[அரசாங்கப் பதிவு பெற்றது 7753]

இராஜநாயகி தியேட்டர், காங்கேசன்துறை, [652]



PERSONAL CLASSES

B. M. C. முன்லேன் – யாழ்ப்பாணம்.

(எமது ஆசிரியர் குழு)

| | | | |
|---|---|---|---|
| PHYSICS | திரு. சத்தியசீலன் | B. Sc. | (Cey) |
| CHEMISTRY | திரு. மதுரமணி | B. Sc. | (Cey) |
| ZOOLOGY | திரு. ஈஸ்வரதாசன் | B. Sc. | (Cey) |
| BOTANY | திரு. சர்வானந்தா | B. Sc. | (Cey) |
| PURE & APP. MATHS | திரு. விஜயகுமார் | B. Sc. | (Cey) |

- A/L 89 Day Classes புதியபிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன.
- A/L 89 Paper Classes நடைபெறுகின்றன.
- A/L 91 Week end Classes நடைபெறுகின்றன.
- A/L 90 Week end Classes ஆரம்பமாகவுள்ளன.

[illegible] [சி-2621]



சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.உ)

வெற்றுச்சாக்கு கேள்வி விண்ணப்பம்

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் தரம் பிரிக்கப்பட்ட 1800 வெற்றுச் சாக்குகள் கேள்விப் பத்திர மூலம் விற்பனைக்குண்டு. வைப்புப் பணமாக ரூபா 250/– செலுத்தி விண்ணப்பப் படிவத்தை சங்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து தபால் உறையின் இடது பக்க மூலையில் வெற்றுச் சாக்குக் கேள்வி என எழுதப்பட்டு " பொது முகாமையாளர், சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், சங்கானை " என்ற முகவரிக்கு 27 – 5 – 89 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்பதாக அனுப்பப்படல் வேண்டும்.

பொது முகாமையாளர்,
சங்கானை ப. நோ. கூ. சங்கம்.

22. 5. 89 (சி/2620)



வாடகைக்கு வீடு தேவை

ஆராய்ச்சி மற்றும் சமூக சேவையில் ஈடுபடும் நிறுவனத்திற்கு செயலகமாகப் பயன்படுத்தக் கூடியதான வீடு வாடகைக்குத் தேவை.

2500 ச அடிக்குக் குறையாமல் குறைந்த பட்சம் ஆறு அறை மற்றும் கூடம் கொண்ட வீடு எதிர் பார்க்கப் படுகின்றது. யாழ். மாநகரசபை எல்லை அல்லது அதற்கு அண்மித்த இடத்திலும் இலகுவான போக்குவரத்து வசதியுடையதாகவும் இருக்க வேண்டும். அடிப்படை வசதிகளைக் கொண்டதாக அமைய வேண்டும் செயலகப் பாவனைக்கு ஏற்ப சிறிய திருத்தங்கள் எம்மால் மேற்கொள்ளப்படும். தகுந்த முற்பணமும், நியாயமான வாடகையும் கொடுக்கப்படும். விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

இல. 521/5, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(11023)



வேலை வாய்ப்பு - குவைத்

எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைக்கு உடனடியாக இருபது கூலி ஆட்கள் தேவை.

வயது: 22 — 36 க்கும் இடைப்பட்டவர்.
மாதாந்த சம்பளம்: ரூபா 2784/-
ஓவர்ரைம் உண்டு,
உணவு, இருப்பிடம் முதலியன இலவசம்
நாலு வருட ஒப்பந்தம்

- பாஸ் போட் மூன்று வருடங்களுக்கு குறையாமல் இருத்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு:-
இம்மாதம் 23ஆம், 24ஆம் 25ஆம் திகதி வரை காலை 10.00 மணிக்கும் 12.00 மணிக்கும் இடையில்

தொடர்பு கொள்ள வேண்டிய இடம்:-

N. Sivapragasam,
C/o N. Bala,
No. 11A, Momsac Building,
Stanley Road, Jaffna.

பதிவு இல: No. 35
Vauxhall Mills Corp.
Colombo.

(653)


# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



சுப்பிரமணியம்
செல்வநாயகராஜா மகாதேவா
(சட்டத்தரணி)

மலர்வு: 20 - 11 - 1912

உதிர்வு: 14- 06- 1987

திதி: 23- 05- 1989

தனக்கென்று வாழாது உற்றோர், உறவினர் குடும்பத்தவர்கள் நலனுக்காக அயராது உழைத்து, எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய், அன்பாய், பண்பாய், பாசமாய் எம்முடன் இருந்து எம்மைவிட்டுப் பிரிந்த தெய்வமே! இரண்டு ஆண்டுகள் முடிந்தாலும் உங்கள் நினைவு எங்கள் நெஞ்சை விட்டகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

80, புங்கங்குளம் வீதி,
யாழ்ப்பாணம். (11026)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# விரக்தி அடைந்த நிலையிலேயே
# அனேக இளைஞர் வாழ்கின்றனர்

## தடுப்பு முகாமிலிருந்து விடுதலையானோர் மனோநிலை குறித்து ஆய்வு அறிக்கை

யாழ்ப்பாணம், மே 23
தடுப்புமுகாம்களில் இருந்து விடுதலையாகும் இளைஞர்கள் தற்கொலை யோசனையுடனேயே வாழ்கிறார்கள்.

வைத்திய கலாநிதி என். சிவராஜாவின் மேற்பார்வையில் எஸ். ஏ. புவிநாதன், எச். சண்முகராஜா, என். லக்ஷ்மன், டொன்னி அன்று ஆகியோர் மேற்கொண்ட வைத்தியபீட ஆய்வு அறிக்கையில் இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மருத்துவ சங்கத்தின் கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கப்பட்ட இந்தஆய்வில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பூஸா இராணுவ முகாமில் இருந்து விடுதலையான வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த 160 பேரை ஆய்வு செய்து இக்கட்டுரையைச் சமர்ப்பிக்கின்றோம். இதில் இரண்டு பெண்களும் அடங்குவார்கள்.

தடுப்பு முகாமில் இவர்கள் உடல், உள சித்திரவதைகளுக்கு ஆளாக்கப்பட்டார்கள்.

உடல் சித்திரவதைகளால் இவர்கள் உளப்பயங்கரம், பின் விளைவுகளால் தீராத ஏக்கம், மனச்சோர்வு, நம்பிக்கை இன்மை, நித்திரைக் குழப்பம், தற்கொலையோசனை ஆகியவற்றால் பாதிக்கப்பட்டு இருப்பதைக் காண முடிந்தது.

16 வயதுக்கும் 66 வயதுக்கும் இடைப்பட்டவர்களை ஆய்வு செய்தோம். 13மாதங்கள் சராசரியாக இவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

உள ரீதியாக ஏக்கம், கோபம், ஆத்திரம், தீராத தலையிடி, கண் பார்வைப் பாதிப்பு, தோல் நோய், நெஞ்சு நோ, காது பாதிப்பு உடல் வலி ஆகியவற்றால் இவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இப்படி அந்த ஆய்வறிக்கை தெரிவிக்கிறது. (இ'3)

## நிலாவெளியில் நால்வர் கொலை

திருகோணமலை, மே 23
நிலாவெளியில் கடந்த 17 ஆம் திகதி இரவு ஒரு குழந்தை உட்பட நால்வர் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

நிலாவெளியில் பிரபலமானவரான காசிப்பிள்ளை என்பவரும் வேறு இருவரும் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் வீடுகளில் வைத்தே ஆயுதபாணிகளால் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளனர். (ஒ-150)

## வடிகால்களில் வேலி!

குருநகர், மே 23
வடிகால்களிலும் வேலிகள் போடப்பட்டு வருகின்றன.

இந்நிலைமை யாழ் நகரப் பகுதிகளில் குறிப்பாக குருநகர்ப் பகுதியில் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-51)

## தற்கொலை

மண்டைதீவு, மே 23
வாழ்க்கையில் விரக்தி அடைந்த வாலிபர் ஒருவர் அலரிக்காய் சாப்பிட்டு மரணமானார்.

நாரந்தனை 8-ம் வட்டாரத்தைச் சேர்ந்த ம. அன்ரனி மதுரநாயகம் (பாபு) வயது 20 என்பவரே இவ்வாறு மரணமானார்.

இவரது மரணம் குறித்து அல்லைப்பிட்டி திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. ஏ. வல்லிபுரநாதன் முன்னிலையில் இறந்தவரின் தாயார் திரேசம்மா, சி. சாம்சன், முன்னாள் நீதிமன்றப் பதிவாளர் அ. சிறில் ஆகியோர் சாட்சி அளித்தார்கள்.

தற்கொலை மரணம் என்று மரண விசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார். (3-88)

## சமய வளர்ச்சி வேண்டுமானால் சமூக வளர்ச்சியும் வேண்டும்

### இந்து மாநாட்டில் திருமலைப் பிரதிநிதி

யாழ்ப்பாணம், மே 23
இந்துசமய வீழ்ச்சி பற்றிப் பேசிக் கொண்டு இருப்பதில் பயனில்லை. சமயத்தை மட்டும் வளர்க்க வேண்டும் என்று நினைக்காமல்சமூகப் பொருளாதாரம்ஆகியவற்றின் வளர்ச்சியையும்திட்டமிட்டால்தான் சமயமும் வளரும்.

நல்லூரில் நடைபெறும் இந்து இளைஞர் பேரவை மாநாட்டில் பேசுகையில் திருமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவைத் தலைவர் திரு. சுந்தரலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் ''இன்று நடக்கும் போராட்டத்தில் மிக முக்கிய நகரமாகவும் மானத்துடனும் வீரத்துடனும் வாழ்ந்ததனித் தமிழ்மாவட்டமாகவும், தமிழ் மக்களின் சரித்திர சான்றுகள் கொண்ட மாவட்டமாகவும் விளங்கும்திருமலை மாவட்டத்தில்இன்றுமூன்றுஇனமக்களும் சரிசமனாக வாழும் நிலைதிட்டமிட்டு அழிக்கப்பட்டுள்ளது. இங்கு நிலவிய தமிழ் இந்து சூழல் ஒழிக்கப்பட்டுள்ளது. இந்த நிலைமையிலும் இந்து இளைஞர்பேரவைதமிழ்-இந்து வளர்ச்சியில் முன் நின்று உழைத்து வருகிறது''

இப்படி அவர் கூறினார். (க-3)

## மந்திகையில் கடைகள் மூடப்பட்டன

வடமராட்சி, மே 23
மந்திகைப் பகுதிக் கடைகள் சனிக்கிழமை மூடப்பட்டன. ''உத்தரவு'' ஒன்றைத் தொடர்ந்தே கடைகள் மூடப்பட்டதாகக் கூறப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை இப்பகுதியில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டதாகவும் சொல்லப்பட்டது. [ஒ-160]

## செட்டிக்குளத்தில்
## மீளக் குடியமர்ந்தோருக்கு வீட்டுப் பாவனைப் பொருள்கள்

வவுனியா, மே 23
இந்தியாவினால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட நிவாரண உதவிகளின் ஒருபகுதியான வீட்டுப் பாவனைப் பொருள்கள் புனர்வாழ்வுத் திட்டத்தின்கீழ்செட்டிக்குளம் பகுதியில் மீளக் குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன.

முதல்கட்டமாக வழங்கப்பட்ட இந்த விநியோகவைபவத்தில் வவுனியா மாவட்டத்தின் மாகாணசபை உறுப்பினர்களும் கலந்துகொண்டார்கள்.

செட்டிக்குளம் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து பின்னர் மீளக்குடியமர்ந்துள்ள 250 குடும்பங்களுக்கு இந்த உதவிகளை வழங்குவதற்கு அதிகாரிகள் முடிவுசெய்துள்ளார்கள். (இ-164))

## ஒன்றியம் ஆரம்பம்

குருநகர், மே 23
யாழ் மாவட்ட கிராமிய கடற்றொழில் அபிவிருத்திச் சங்கங்களின் ஒன்றியம் கடந்த சனிக்கிழமை யாழ் பாங்ஷால் வீதியில் திறந்து வைக்கப்பட்டது.

குருநகர் புனித யாகப்பர் ஆலயப் பங்குத்தந்தை வண. பிதா பி.எம். இம்மானுவேல் அடிகளார் நிலையத்தை திறந்து வைத்தார்.

இளைப்பாறிய கடற்றொழில் பரிசோதகர் திரு எல். வி. பிலிப் ஒன்றிய பொருளாளர் திரு. மரியதாஸ் ஆகியோர் வைபவத்தில் கலந்து உரையாற்றினர். (க-51)

## ரயில்வே வெற்றிடங்கள்

மட்டக்களப்பு, மே. 23
ரயில்வேத் திணைக்களத்திலுள்ள ரயில் நிலைய அதிபர், பாதுகாப்பு உத்தியோகத்தர், எழுதுவினைஞர் ஆகியோருக்கான பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களம் முடிவு செய்துள்ளது.

வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் தற்போது கோரப்பட்டுள்ளன.

விண்ணப்ப முடிவு திகதி 31- 05 - 1989 ஆகும். (க-21)

## 10 துப்பாக்கிகள் அபேஸ்!

கொழும்பு, மே 23
தீவிரவாதிகள் கோஷ்டி ஒன்று உடப்புசல்லாவை அரச தோட்ட, உதவித் தோட்டத்துரையின் அலுவலகத்தினுள் புகுந்து பத்து துப்பாக்கிகளைக் கொள்ளையடித்துச் சென்றது. (ஒ-எ)

## பாடநூல்களைக் கற்பதால் மட்டும் அறிவு வளர்ந்து விடுவதில்லை

### நூலகத்திறப்பு விழாவில் அதிபர் உரை

யாழ்ப்பாணம், மே 23
''வெறுமனே வகுப்பறை பாடநூல்களைக் கற்பதால் மட்டும் அறிவு வளர்ந்து விடுவதில்லை. பல்துறை இலக்கியங்களையும், நவீன அறிவியல் தொழில்நுட்ப நூல்களையும் மாணவர்கள் வாசிக்க வேண்டும். அப்பொழுதான் அவர்களது அறிவு, பொது அறிவு விருத்தியடையும். இதற்கு இளம் பருவத்தில் இருந்தே வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

தாவடி இந்துதமிழ்க்கலவன் பாடசாலையில் இடம்பெற்ற நூலகத் திறப்பு விழாவில் தலைமை வகித்த பாடசாலை அதிபர் திரு. அநு. வை. நாகராஜன் தனது தலைமையுரையின்போது இப்படிக் கூறினார்.

வைபவத்துக்கு இப்பாடசாலையின் பழைய மாணவரான திரு. கனகரத்தினம் சிவசம்பு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு ஆயிரம் ரூபா பெறுமதியான நூல்களை அன்பளிப்புச் செய்தார்.

அதிபர் நாகராஜன் தமது உரையில் மேலும் பேசுகையில் ''இந்தப் பாடசாலை பல வசதியீனங்கள் மத்தியிலும் நூலகத்தின்தேவையை உணர்ந்து பல ஆண்டுகளின் பின் நூலகம் ஒன்றை ஆரம்பிக்கத் திரு. சிவசம்பு முன்வந்துள்ளது பாராட்டத்தக்கது'' எனக் கூறினார்.

திரு. சிவசம்பு தமது உரையில் ''மாணவர்கள் முழுமையான கல்வியைப் பெற ஒரு பாடசாலை நூலகம், விளையாட்டு மைதானம், விஞ்ஞான ஆய்வுகூடம் ஆகியவைகளைக் கொண்டுள்ளதாக இருக்கவேண்டும்.

இதைக் கருத்தில்கொண்டே இங்கு நூலகம் ஒன்றை அமைக்க முன்வந்தேன்'' எனக் கூறினார்.

வைபவத்துக்குப் பெற்றோர் நலன் விரும்பிகள் பழைய மாணவர்கள் பலர் சமுகமளித்திருந்தனர்.

பாடசாலை அபிவிருத்திச் சங்க [illegible] ஆர். சரவணபவான் நன்றியுரை வழங்கினார். (ச)


உ

## திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் சுக்கில வருஷம் வைகாசித் திங்கள் 12 ஆம் நாள் (25 - 05 - 1989) வியாழக்கிழமை பகல் 12.01 மணிமுதல் 1.18 மணி வரையுள்ள தனு லக்கின சுப முகூர்த்த வேளையில்

எமது கனிஷ்ட புத்திரன்
செல்வன்
**சிறி விக்னேஸ்வரராஜா**
(ராஜன்)
[R. S. ரயர் வேக்ஸ் உரிமையாளர்]
அவர்களுக்கும்

எமது ஏக புத்திரி
செல்வி
**சிறீ ரஞ்சனி**
(ரஞ்சனி)
அவர்களுக்கும்

மணமகள் இல்லத்தில் நடைபெறவிருக்கும் திருமண வைபவத்தில் தாங்கள் சுற்றம் சூழ வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வண்ணம்
தங்கள் நல்வரவை விரும்பும்

திருமதி இ. இராசதுரை,
15/2, ஒடை ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

திரு. திருமதி க. செல்வநாயகம்,
புதுரோட், ஆறுகால் மடம், யாழ்ப்பாணம்.

(தனிப்பட்ட அழைப்பிதழ் இல்லை)



# Jaffna English Academy

**(A LUX IN TENEBRIS)**

The Secret of our Success is our Strength, because it mixes our quality and our experience of 2½ decades.

## ● ESOL
(N C E) (English for Speakers of Other Languages)

London Examinations held at JAFFNA ENGLISH ACADEMY
The Local Examination Centre for Pitmans - London Assessment of Answerscripts and award of Certificates from Pitmans - London.

★ Reading - Writing - Listening - Grammar etc.
★ Graded Objectives to proficiency.
★ Worldwide recognition.
★ The content has been carefully chosen not to penalise Candidates who have never visited the U. K.

WEEK - END BATCH — 11.30 a.m to 1.00 p.m
COMMENCEMENT — 28 - 05 - 89
WEEK - DAY BATCH — Mondays & Wednesdays 8.30 to 10.30 a.m
COMMENCEMENT — 29 - 05 - 89
DURATION: 3 Months — COURSE FEE: Rs. 350/- only

## ● TOEFL
(Teaching Of English As A Foreign Language)

Toefl is an entry requirement for most foreign Universities/Colleges. Equip yourself with a good score. Unlimited hours of listening provided. Over 50 listening Comprehension exercises provided. Many past papers will be meticulously done.

WEEK - END BATCH — 8.00 to 10.00 a.m
COMMENCEMENT — 28 - 05 - 89
WEEK - DAY BATCH — Tuesdays & Fridays 2.00 to 4.00 p.m
COMMENCEMENT — 30 - 05 - 89
DURATION: 3 Months — COURSE FEE: Rs. 350/- only

## ● SPOKEN ENGLISH (for Adults)

Ideal for those who wish to acquire greater proficiency in English as a necessary everyday Language.

WEEK - END BATCH — 10.00 to 11.30 a.m
COMMENCEMENT — 28 - 05 - 89
WEEK - DAY BATCH — Tuesdays & Thursdays 8.30 to 10.00 a.m
COMMENCEMENT — 30 - 05 - 89
DURATION: 3 Months — COURSE FEE: Rs. 150/- only

## ● G. C. E. (Advanced Level) ENGLISH 1990 AUGUST EXAMINATION

Week - end Classes: 3.00 to 5.00 p.m.
Fees: Rs 50/- per month.

**Lectures: Kandiah Navarendran**

## ● SPOKEN ENGLISH (Higher-above 14 years)

Tuesdays & Fridays 4.00 to 5.00 p.m.
DURATION: 3 Months  COURSE FEE: Rs. 125/- Only.

## ● SPOKEN ENGLISH (Middle-between 9 and 14 years)

Mondays & Wednesdays 4.00 to 5.00 p.m.
DURATION: 3 Months  COURSE FEE: Rs. 125/- Only

## ● ELOCUTION (Stages 1 & 2)

Thursdays 3.30 to 4.30 p.m.
Sundays 10.30 to 11.30 a.m.
DURATION: 3 Months
COURSE FEE: Rs 125/- Only

## ● ELOCUTION (Stages 3 & 4)

Thursdays 4.30 to 5.30 p.m.
Saturdays 10.30 to 11.30 a.m.
DURATION: 3 Months
COURSE FEE: Rs. 125/- Only

## ● G. C. E. (O/L) ENGLISH LANGUAGE - 1989

Mondays & Wednesday 5.00 to 6.30 p.m.
FEES: Rs 35/- per month

## ● CLASS WORK

Years 8 & 9 — Saturdays & Sundays 9.00 to 10.00 a.m. FEES: Rs. 30/- per month
Years 6 & 7 — Saturdays & Sundays 8.00 to 9.00 a.m. FEES: Rs.25/- per month.

**Lectures: Mrs E. R. Mather**

**9, RAKKA LANE, CHUNDIKULI, JAFFNA.**

[C-2602]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுறைப் பண்களை பக்தியுடன் ஓத வேண்டும்

## பாராட்டு வைபவத்தில் உரை

யாழ்ப்பாணம், மே 23

''தமிழ் மறையாகிய திருமுறைப்பண்களை, எழுத்து, சொல் பிழைகளின்றிப் பொருள் கெடாத வண்ணம் பக்தியுடன் ஓதினால் இறை அருள் பெற்று உய்யமுடியும்''

புளியங்கூடல், சிவநெறித் தொண்டர் கழகச் செயலாளர், ஆசிரியர் திரு. சி. தருமலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

புளியங்கூடல் - இந்தன் முத்துவிநாயகர் ஆலய ரதோற்சவத்தன்று இந்தப் பாராட்டு வைபவம் இடம் பெற்றது.

புளியங்கூடல் - இந்தன் முத்துவிநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தின் போது தினமும் ''திருமுறைப் பண்ணிசைப் பாராயணம் நிகழ்த்திய புளியங்கூடல் சிவநெறித் தொண்டர் கழகத் திருமுறைப் பண்ணிசைப்பாடசாலை மாணவ மாணவிகள் பாராட்டப்பட்டனர்.

வைபவத்தில் ஸ்ரீவாகீச சர்மா, ஆலய அறங்காவலர் திரு. கு. கணேசலிங்கம், இளைப்பாறிய ஆசிரியர் திரு. சி. இரத்தினம் உட்படப் பலர் பாராட்டுரை வழங்கினார்கள்.

செல்வி மதிவதனி மயில்வாகனம் பஞ்சபுராணம் ஓதினார்.

செல்வி ம. கேதீஸ்வரி, ''சைவப்பண்புகள்'' என்ற பொருளில் சொற்பொழிவாற்றினார்.

தேவார இசைமணி தாவடியூர் இரா திருஞானசம்பந்தன் மாணவ மாணவிகளுக்கு திருமுறைப் பண்ணிசைப் பயிற்சி அளித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (க)

# ஷப்ரு - கொக்குவில் சனசமூக அணிகள் வெற்றி!

யாழ்ப்பாணம், மே 23

ஷப்ரு நிதி நிறுவனத்தின் ஆதரவில் ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கிரிக்கெட் போட்டியில் 21ஆம் திகதி காலை நடைபெற்ற ஆட்டத்தில் நொதேர்ண் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஆடிய ஷப்ரு விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நொதேர்ண் விளையாட்டுக் கழகம் 30 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 89 ஓட்டங்களைப் பெற்றது.

எஸ். சுதாகர் 25 ஓட்டங்களையும் சிவமாறன் ஆட்டம் இழக்காமல் 19 ஓட்டங்களையும் புஸ்பவிஞேதன் 12, மஞேகரன் 11 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் வை. ஜெயந்தன் 3 விக்கெட்டுகளையும் பி. பிரபாநந்தன், எஸ். பி. எஸ்.இளங்கோ, எஸ். தயாளன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் எஸ். சுரேஸ் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

எஸ். தயாளன் 6 ஓவர்களில் பந்துவீசி 6 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

பின்னர் ஆடிய ஷப்ரு அணி 18. 3 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து குறித்த இலக்கை எய்தியது.

இ. விஜயகுமார் 18, ஏ. அன்றூ கிறேஷியன் 13, வை. ஜெயந்தன் ஆட்டமிழக்காமல் 12, எஸ். சுரேஸ் 11 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் கோவீந்திரா, முரளி, எஸ். சுதாகர் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

**கொக்குவில் அணி**

மாலை நடைபெற்ற ஆட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து ஆடிய கொக்குவில் சனசமூக நிலைய அணி வெற்றியீட்டியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பல்கலைக்கழக அணி 29. 4ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 99 ஓட்டங்களைப் பெற்றது.

வை. முரளிதரன் 24, ஆர் மகிந்தா 16, எஸ். கணேஸ் பஞ்சன் 15, எஸ். அகஸ்டின் 13 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் எஸ். கிருபாநந்தன், விஜயநாதன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும் பாலகுமார் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பின்னர் ஆடிய கொக்குவில் அணி 20 ஓவர்களில் 104 ஓட்டங்களைப் பெற்றது.

விஜயநாதன் ஆட்டமிழக்காமல் 35, உமாசங்கர் ஆட்டம் இழக்காமல் 24, விஸ்வநாத் 18, எம். பாலகுமார் 15 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் கே. அகிலன், எம்.பரமலிங்கம், வை. முரளிதரன், எஸ். இளஸ்ரன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர். (இ- 6)

# ஏப்ரல் மாதம் வழங்கப்பட்டது: இறந்தவர்கள் - காயப்பட்டோர் குடும்பங்களுக்கு நஷ்டஈடாக 1 லட்சத்து 72 ஆயிரத்து 450 ரூபா

யாழ்ப்பாணம் மே, 23

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் கடந்த எப்ரல் மாதத்தில் இறந்தவர்களது குடும்பங்களுக்கும் காயப்பட்டோர்களுக்கும் உடனடி நிவாரணமாக 1இலட்சத்து 72 ஆயிரத்து 450 ரூபாவை வழங்கியிருக்கிறது.

பலாலி விமான நிலைய விஸ்தரிப்பால் வெளியேறியவர்களுக்கு விதை வெங்காயம்' பசளைகளுக்காக 1 இலட்சத்து 5 ஆயிரத்து 100 ரூபாவையும், கோப்பாய், புதிய மடம், உடுவில், அராலி வீதி, யாழ்ப்பாணம், கந்தர்மடம் ஆகிய இடங்களுக்கு குடிசைகள் அமைக்க 1 இலட்சத்து 4ஆயிரத்து 754 ரூபாவையும் இந்த நிறுவனம் வழங்கியிருக்கிறது.

பாடசாலை உபகரணங்களுக்காக பூநகரி மகா வித்தியாலயம், வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி, சுதுமலை சின்னையா பாரதி வித்தியாலயம் ஆகியவற்றுக்கு ரூபா 65,374 ஐயும்,

முகாம்களில் இருந்து விடுதலையான வவுனியா மாவட்டத்தவர்களுக்கு வைத்திய உதவிகள், கண்ணுடிகள், ஜெய்ப்பூர் உறுப்புகள், வீட்டுத் தேவைக்கு ஏற்பப் பொருட்கள் ஆகியவற்றுக்கு ரூபா 61,766. 50சதத்தையும்,

குமுழமுனை அகதிகளுக்கு குடிசை அமைப்பதற்கு ரூபா 43,000 ஐயும்,

கோழிப் பண்ணைக்காக கரவெட்டி மக்களுக்கு ரூபா 30,000 ஐயும்,

பால் மாவுக்காகவும் ஞான சம்பந்தர் சிறுர் இல்லத்துக்கும் தண்ணீர்த் தொட்டி, நீர் இறைக்கும் இயந்திரம், தையல் மெசின் ஆகியவற்றுக்காகவும் ரூபா 45,184. 40 சதத்தையும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் கொடுத்திருக்கிறது.

நிறுவனம் ஏப்ரல் மாதத்தில் புனர்வாழ்வுக்காக மொத்தம் ரூபா 6,52,629.90 சதத்தை வழங்கியிருக்கிறது. (க)

## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



| தாயின் மடியில்: | துர்க்கை மடியில்: |
|---|---|
| 01 | 23 |
| 06 | 05 |
| 1926 | 1988 |

**திருமதி கனகேஸ்வரி சபாரத்தினம்**

சித்தம்,
தெல்லிப்பழை. [10896]

## வழிகாட்டியாகச் சேர்க்கப்பட்டவர் வாழ் நாள் முழுதும் வழிகாட்டுபவரே

### வழிகாட்டிகள் இயக்க ஆணையாளர் உரை

யாழ்ப்பாணம், மே 23

ஒருவர் வழிகாட்டி இயக்கத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டால் அவர் தனது வாழ்நாள் முழுவதும் வழிகாட்டியாகவே தன்னை நடத்திக் கொள்ள வேண்டும். தினமும் வீட்டிலோ அல்லது வெளியிலோ மற்றவர்களுக்கு ஓர் உதவியைச் செய்ய வேண்டும் என்ற குறிக்கோளுடன் நடந்து கொள்ள வேண்டும்.

மானிப்பாய் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற வழிகாட்டிகளைப் பதிவு செய்யும் வைபவத்தில் வழிகாட்டிகள் இயக்கப் பிரிவு ஆணையாளர் திருமதி மயில்வாகனம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தமது உரையில் மேலும் கூறியதாவது.

உங்கள் கல்லூரியில் இவ் வழிகாட்டிகள் இயக்கம் மிகவும் சிறந்த முறையில் நடைபெறுவதையும் மாணவர்கள் வாய் மொழிப் பரீட்சையை மிகவும் ஆர்வத்துடன் ஆங்கிலத்தில் செய்வதையும் பாராட்டுகிறேன்.

உங்கள் கல்லூரி அதிபர் ஒரு அங்கீகாரமும் அதிகாரமும் பெற்ற வழிகாட்டித் தலைவியாக இருக்கின்றார். அவரே இந்த வைபவத்தை நடத்திக் கொள்ளக் கூடிய தகைமை உள்ளவர்.

இருந்தும் என்னை அழைத்ததையிட்டு உங்கள் ஆர்வத்தைப் பாராட்டுகிறேன்.

இப்படி அவர் கூறினார்.

வழி காட்டித் தலைவி ஆசிரியை செல்வி யோ. நடராஜா நன்றியுரை கூறினார். (ச)

## கொத்தணி வி. போட்டி

நெடுந்தீவு,மே 23

தீவுப்பகுதியை உள்ளடக்கிய ஆறுகொத்தணிப் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் நாளைய தினம் 24 ஆம் திகதி வியாழக்கிழமை வேலணை மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ் பிரதிக் கல்விப்பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி கலந்து கொள்வார். விளையாட்டுப் போட்டிக்கு தீவுப்பகுதி கோட்டக்கல்வி அதிகாரி திரு. எஸ். புலேந்திரன் தலைமை வகிப்பார். (க-111)

## சுவீடனில் மணிமேகலை பற்றி சிவத்தம்பி விரிவுரை

உப்சலா, மே. 23

ஸ்கன்டினேவிய நாடுகளில் தமிழ்ப் பயணம் மேற்கொண்ட பேராசிரியர் கா. சிவத்தம்பி ஏப்ரல் மாதத்தில் உப்சலா பல்கலைக்கழகத்தில் மணிமேகலை காப்பியத்தின் இறுதி நான்கு கதைகளில் வரும் சமயவாதப் பிரச்சினைகள் பற்றி விரிவுரைகள் நிகழ்த்தினார். இன்னும் பல்வேறு துறைகளைச் சேர்ந்தவர்கள் தமிழரின் சமுகப் பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடினார்கள்.

உப்சலாப் பல்கலைக் கழகத்தின் தமிழ்ப் பேராசிரியை றுத் வால்டென் அம்மையார் வடமொழிப் பேராசிரியை குணில் லாக்றெக்னர் லுன்ட், இந்துஇயல் சிரேஷ்ட்ட விரிவுரையாளர் கலாநிதி கிளாஸ் ஹாக்ரன், தமிழ் கற்கும் சுவீடன் மாணவன் திரு. லார்ஸ், கலாநிதிப்பட்ட ஆய்வு மாணவன் திரு. அமிர்தலிங்கம் ஆகியோர் இந்த நிகழ்ச்சியில் பங்கு பற்றினார்கள்.

இறுதி நாளில் ''தமிழர் இசை மரபில் சமயம்'' என்ற பொருள் பற்றிப் பேராசிரியர் சிவத்தம்பியின் விரிவுரை நிகழ்ந்தது. அதற்கு விளக்கமாக ஒஸ்லோம் பல்கலைக்கழக மாணவர்கள் பொன். சுபாஷ் சந்திரன், என். சாரதாதேவி, கே. கிருபா ஆகியோரின் வாய்ப்பாட்டும் என் கலைச் செல்வியின் வீணையும் இடம் பெற்றன. பி. கிருபாகரன் மிருதங்கமும் கே. சுந்தரமூர்த்தி தம்புராவும் இசைத்தனர். இவர்கள் யாழ். இசை மன்றத்தின் மாணவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது. (க)

## இளம்பெண் தற்கொலை

மண்டைதீவு, மே 23

இளம்பெண் ஒருவர் சரவணையில்நஞ்சு குடித்து மரணமானார்.

இவரது மரணம் குறித்து அல்லைப்பிட்டி திடீர் மரண விசாரணை அதிகாரி அ. வல்லிபுரநாதன் விசாரணை நடத்தினார்.

தற்கொலை மரணம் என்று மரணவிசாரணை அதிகாரி தெரிவித்தார். (க-88)

## பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி



**பேராசிரியர் சோ. செல்வநாயகம்**

உங்கள் நினைவு எங்கள் இதயங்களில் இன்னமும் பசுமையாக இருக்கின்றது.

அன்பு மனைவி, பிள்ளைகள்.

''செல்வம்''
123, கோவில் வீதி,
யாழ்ப்பாணம். (10994)

## குடத்தனையில் தொழிற் திணைக்களத்தின் தையல் பயிற்சி நிலையம்

வடமராட்சி, மே 23

குடத்தனையில், தொழிற் திணைக்களத்தால் தையல் பயிற்சி நிலையம்ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஊற்றுநற்சார்பு குடத்தனைக் கொத்தணிப் பிரிவின் அனுசரணையுடன் ஆரம்பிக்கப்பட்ட மேற்படி நிலையத்தை யாழ்.மாவட்டதொழில்உதவி ஆணையாளர் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்துவைத்தார்.

வைபவத்தில் திரு. ஆர். தர்மலிங்கம் (தொழில் உத்தியோகத்தர்) திரு. பொ. க்னேஸ்வரன் (ஊற்று பிரதான பணிப்பாளர்) திரு. எஸ். இராஜேந்திரன் (ஊற்று முகாமையாளர்), திரு. ஏ.வி. பொன்னு (இளைப்பாறிய அதிபர் குடத்தனை) ஆகியோர் உரையாற்றினர்.

இப்பயிற்சி நிலையத்துக்கு இருபத்தைந்து பயிற்சியாளர்கள் தெரிவாகியுள்ளார்கள்.

இவர்களுக்கு ஊதியமாக நாள் ஒன்றுக்கு ரூபா 15 தொழிற்திணைக் களத்தால் வழங்கப்படும். [இ160]

## சடலம் அடையாளம் காணப்பட்டது

யாழ்ப்பாணம், மே 23

கடந்த 14 ஆம் திகதி அமைதிப்படையினரால் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்ட சடலம் சனியன்று அடையாளம் காணப்பட்டது

திருகோணமலை சிவன் வீதியைச் சேர்ந்த வேலையா ரமேஷ் [வயது 19] எனத் தெரிவிக்கப்பட்டது.

இவரது தாயார் வேலையா யோகேஸ்வரி சடலத்தை அடையாளம் காட்டினார். (க-10)

மக்கள் மகம்

## சலவைத் தொழிலாளர் சங்கம்

காரைநகர், மே 23

காரைநகர் அல்லின் வீதி சலவைத் தொழிலாளர் சங்கத்தின் புதிய நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்கள் பின் வருமாறு:- தலைவர் திரு. எம். குணநாயகம், உபதலைவர் செ. கணேசன். செயலாளர் திரு. எஸ். லிங்கராசா உப செயலாளர் ம. தங்கராசா, பொருளாளர் திரு. க. வில்வராசா, கணக்காய்வாளர் போஷகர் திரு. எம். நடராசா. (க-73)

## உதயசூரியன்

காங்கேசன்துறை, மே 23

காங்கேசன்துறை உதயசூரியன் சனசமூக நிலையத்தின் 6ஆவது ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு த. இரத்தினசிங்கம் உபதலைவர் திரு. அ. தங்கவடிவேல், செயலாளர் திரு. சி. புஷ்பராஜா, உப செயலாளர் திரு. கோ. கௌரிபால், பொருளாளர் திரு. க. கேதீஸ்வரன், உப பொருளாளர் திரு. சி. பிரபாகரன். (க-68)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 08 06 - 1920

மறைவு; 16 05 - 1987

**திரு. இராஜசிங்கம் கணபதிப்பிள்ளை**

[ உரிமையாளர் R. கணபதிப்பிள்ளை அன் கோ. ]

உங்கள் ஆத்ம சாந்திக்காக வேண்டியிறைஞ்சும்

சகோதர,
1014 கே. கே. எஸ். ரூட் உற்ருர், உறவினர்கள்
யாழ்ப்பாணம்
(11021)

## 5 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



**தம்பிராசா தெய்வேந்திரன்**

ஆண்டவன் படைப்பு: 12-07-1956

அழிப்பு: 17-05-1984

திதி:- 23-05-1989

அன்பின் இருப்பிடமே! பாசத்தின் சுடர்விளக்கே! குடும்பத்தின் குலவிளக்கே! பண்பின் தீப ஒளியே! உம்மைப் பிரிந்து 5 ஆண்டுகள் சென்றும் உம் பிரிவு என்றும் எம்மை வருத்துகின்றதே. உமது ஆத்ம சாந்திக்காக இறைவனிடம் மன்றாடுகின்றோம்.

தாய், சகோதரர், உறவினர்கள்.

Commantharai
V.V.T. [985]

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து



**செல்வி ம.மதிவதனி**

மறவன்புலோவைச் சேர்ந்த மணிவண்ணன்- கலாமதி தம்பதிகளின் செல்வப் புதல்வி மதிவதனி தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று தமது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகின்ருர். இவரை அன்பு அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, பிரான்ஸ் மாமா,மாமி, சீலன் மாமா, சவுதி மாமா,குட்டிமாமா, சித்தி, நாயன்மார்கட்டில் இருக்கும் அப்பப்பா, அப்பம்மா, அத்தை, சின்னசித்தப்பா இந்தியா சித்தப்பா, அத்தை, மாமாமார், மாமிமார், மச்சாள்மார், மச்சான்மார், மட்டுவிலைச் சேர்ந்த அப்பப்பா, அப்பம்மா, ஜெனுமாமி, முருகானந்த மாமா, சிவா மாமா, மாமி, சோபிதாமச்சாள், மற்றும் உற்ருர், உறவினர்கள், அனைவரும் பிள்ளையார் அருளால் சகல கலைகளும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்ருர்கள்.

[11014]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

அற்றது அறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து.

**பொருள்:**

முன்கண்ட உணவு செரித்த தன்மையை அறிந்து மாறுபாடில்லாத உணவுகளைக் கடைப்பிடித்து, அவற்றையும் நன்றாகப் பசித்த பிறகு உண்ணவேண்டும்;

உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 24805
22073
23 - 05 - 1989
த. பெ: இல: 28

# பொதுமக்களின் முறைப்பாடு

**பொது** மக்களின் முறைப்பாடுகளை அக்கறையுடன் கவனத்திற்கு எடுக்க வேண்டும். அவற்றைத்தீர விசாரித்து ஆராய வேண்டும். ஆராய்ந்து தக்க தீர்வை மேற்கொண்டு அதனைச் செயற்படுத்த வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம் மக்களின் குறைகளைத் தீர்க்க வேண்டும்.

முறைப்பாடுகளை ஆராய்ந்து தீர்வு கண்டு குறைபாடுகளைத் தீர்ப்பதனை உடனுக்குடன் செய்ய வேண்டும். ஆகக்கூடியது இரண்டு வாரங்களுக்குள் குறைபாடுகளைத் தீர்த்துவிட வேண்டும்.

இவ்வாறு அரசாங்க அலுவலகங்களுக்குப் பணிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களின் முறைப்பாடுகளை ஏற்றுக்கொண்டு அவற்றைக் கையாள்வதற்கு ஒவ்வொரு அலுவலகத்திலும் ஒவ்வொரு சிரேஷ்ட உத்தியோகத்தர் குறித்து ஒதுக்கப்படுவார். முறைப்பாடுகளை விசாரிக்கவும், தீர்வு காணவும் அதிகாரிகளைக் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்படும்.

முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்வது முதல் தீர்வு கண்டு செயற்படுத்துவது குறித்து பொது நிர்வாக அமைச்சு அவை சம்பந்தமான ஒழுங்கு முறைகளையும் எடுத்து உரைத்துள்ளது.

அரசாங்க அலுவலகங்களைப் பொறுத்த வரையில், மேலிடம் விடுக்கும் பணிப்புரைகள் எல்லாம் அமுல் நடத்தப்படுவது என்பதில்லை. சுற்றறிக்கை வந்த ஆரம்பத்தில், சில நாட்களுக்கு அதனை அமுல்படுத்துவதில் அதிகாரி முதல் கீழ் மட்ட உத்தியோகத்தர்வரை ஆரவாரத்துடன் பணியாற்றுவார்கள். சிலகாலம் கழிந்ததும் சுற்று நிருபம் வெறும் காகிதத்தில் எழுதப்பட்ட வாசகமாக மட்டுமே இருக்கும்; இதுவே யதார்த்த நிலை.

அந்த நிலைமை, நிர்க்கதி பொதுமக்கள் முறைப்பாடுகள் சம்பந்தப்பட்ட விவகாரத்திலும் உண்டாகி விடக்கூடாது என்பதே மக்கள் சார்பில் எங்களது விருப்பமாகும்.

அரசாங்க அலுவலகங்களுக்கு மக்கள் எழுதும் கடிதங்களுக்கு என்ன நடந்தது என்பதே சில வேளைகளில் தெரிவதில்லை. கடிதம் எழுதிய பிரசை தவக்கு எந்த விதமான பதில் வருமோ, எப்போது வருமோ என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்க, அவை அலுவலரின் கோவையில் கிடந்து குளிர் பிடிக்கும்; பல சந்தர்ப்பங்களில் அலுவலரின் குப்பைக் கூடைக்குள் இடம் பிடித்து விடுவதும் சகஜம்!

புதிய ஏற்பாடு இதற்கு முற்றுப்புள்ளிவைக்கும் விதத்தில் அமைந்துள்ளது. ஆனால் அது கண்டிப்பாகக் கடைப்பிடிக்கப்படுமா என்பது கேள்விக்கு உரியதாகும்.

அரசாங்க அதிகாரிகள், மக்கள் முறைப்பாடு செய்யாத வகையில் பணியாற்ற வேண்டியவர்கள். ஆனால் அவர்களில் மிகப் பலரும் தம்மை மக்கள் ஊழியர்களாகக் கருதுவதில்லை. மக்களை அதிகாரம் செய்ய வந்த பிறவிகளாகத் தம்மை நினைத்து விடுகிறார்கள்.

பத்திரிகைகளில் வரும் ஆசிரியருக்குக் கடிதப்பகுதிகளில் மக்கள் தெரிவிக்கும் குறைபாடுகளை நறுக்கு எடுத்து, அவற்றில் தெரிவிக்கப்பட்ட குறைகளைத் தீர்க்கவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனச் சம்பந்தப்பட்ட சுற்றறிக்கை கூறுகிறது.

ஜனாதிபதி பிரேமதாசா கூட, அரசாங்கத்தின் குறைபாடுகளை வெளிச்சத்துக்குக் கொண்டு வருமாறு பொதுசனத் தொடர்பு ஸ்தாபனங்களைக் கேட்டிருக்கிறார்.

ஆனால் அரசாங்க அதிகாரிகளோ, தமது பிரிவுகளில் நடக்கும் குறை, குற்றங்களை எழுதினால் பத்திரிகைக்காரர்களை எதிரிகளாகப் பார்க்கிறார்கள். தமிழ்ப் பகுதிகளில் இந்த நிலைமை மிக முற்றிய நிலை என்று சொல்ல வேண்டும். தமது தப்புத்தண்டாக்களை மூடி வைத்து நல்ல பெயர் கேட்க மட்டுமே அவர்கள் விரும்புகின்றார்கள். விமர்சனம், திருந்தி நடப்பதற்கும் முன்னேற்றத்துக்கும் அபிவிருத்திக்கும்வழி செய்யும் என்பதை அதிகாரிகள் மட்டுமல்ல அரசியல்வாதிகளும் உணர்வது நல்லது.

# விவசாயிகளின் பிரச்சினைகளை தீர்ப்பதில் முன்னோடியாகவிளங்கினார்

## ஓய்வுபெறும் உத்தியோகத்தருக்கு பாராட்டு

'நாடிவரும் விவசாயிகளின் மனம் நோகாதபடி நடந்து, அவர்களுடன் பொறுமையுடன் கலந்துரையாடி அவர்களின் தேவைகளையும் பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பதில் உத்தியோகத்தர்களுக்கு ஒரு முன்னோடியாக விளங்கியவர் திரு. எஸ், வி. நடராசா.'

கடந்த 35 ஆண்டுகளாக விவசாயத் திணைக்களத்தில் சேவையாற்றி தமது 55 ஆவது வயதில் ஓய்வு பெறும் உடுவில் கமநலச் சேவை நிலைய விவசாய விஸ்தரிப்புச் சேவை உத்தியோகத்தர் எஸ். வி. நடராசாவின் சேவை நலம் பாராட்டு விழாவில் தலைமை வகித்து உரையாற்றிய கமநலசேவைப் பெரும்பாக உத்தியோகத்தர் திரு. க மகாதேவராசா மேற்கண்டவாறு கூறினார்.

கமநலச் சேவை ஊழியர்களாலும் பயிர்ச் செய்கை உத்தியோகத்தர்களாலும் நடத்தப்பட்ட இந்தப் பிரிவு உபசார விழாவில் பயிர்ச் செய்கை உத்தியோகத்தர் திரு. ச. சிவகுமாரன் உட்படப் பலர் உரையாற்றினார்கள்.

திரு. எஸ். வி. நடராசா பதிலுரை நிகழ்த்தினார். (க-90)

# துண்டிக்கப்பட்ட சிறுவனின் தலையை உடலுடன் பொருத்தி டாக்டர்கள் சாதனை!

போனெனிக்ஸ் [அரிஸோனா] மே 22

துண்டிக்கப்பட்ட தலையை உடலுடன் பொருத்தி வைத்திய உலகில் சாதனை புரிந்த சம்பவம் ஒன்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது பற்றிய விவரம் வருமாறு;

திமோதி மத்தியாஸ், பத்து வயதுச் சிறுவன்.

இவர் மோட்டார் சைக்கிளை ஓட்டிவந்தபோது சிறிய ட்ரக்குடன் மோதிக் கொண்டான். அவ்வேளை 5 மீற்றர் (15 அடி) தூரம் ட்ரக்கினால் இழுத்துச் செல்லப்பட்டான் சிறுவன்.

அப்போது சிறுவனின் தலை முதுகெலும்புடன் இணைக்கப்பட்ட இடத்தில் இருந்து பிய்ந்து போய்விட்டது.

முதுகெலும்புடன் அவனது தலை வெறும் தசைநார்களின் பிடிப்பில் மட்டுமே தொங்கிக் கொண்டிருந்தது.

உடனே சிறுவன் பரோ நியூரோலொஜிக்கல் பிரிவில் அனுமதிக்கப்பட்டான்.

கடந்த ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதி அவனுக்கு சத்திர சிகிச்சை செய்யப்பட்டது. அவனது தலை மீண்டும் முதுகெலும்புடன் ஒட்ட வைக்கப்பட்டது.

இப்போது மத்தியாஸ் தனது தலையை திருப்பக் கூடியதாக இருக்கிறது.

இன்னும் சில மாதங்களில் மத்தியாஸ் வீடு திரும்புவான் என்று ஆஸ்பத்திரிப் பேச்சாளர் டெபோர் குல்பர் சொன்னார்.

உலகில் இதுபோன்ற சத்திர சிகிச்சை அற்புதங்கள் 18 தான் இதுவரை இடம் பெற்றுள்ளன என்று சத்திர சிகிச்சை நிபுணர்கள் தெரிவித்தனர். (எ)

## மாணவர் ஆர்ப்பாட்டம்:

# இராணுவச் சட்டம் அமுல்குறித்து சீனத் தலைமையில் குழப்பநிலை!

சீன மாணவரின் அரசு எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நிறுத்த என்ன நடவடிக்கை எடுப்பது என்பது குறித்து பீகிங் அரசின் உயர்மட்டத்தில் கருத்து வேற்றுமை ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

இராணுவச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டு இரண்டு தினங்களாகியும் இராணுவம் ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைக்க நடவடிக்கை எதையும் எடுக்கவில்லை.

இதனிடையில், உண்ணாவிரதம் மற்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் மாணவருக்கு ஆதரவு தெரிவிக்குமுகமாக பீகிங் நகருக்கு வந்த ஆயிரக்கணக்கான பொது மக்கள் திரும்பிக்கொண்டிருப்பதாகவும் ஒரு செய்தி தெரிவித்தது.

இதனிடையில் சீனப் பிரதமர் லீபெங்கும் சீனக்கம்யூனிஸ்ட் சிரேஷ்ட தலைவர் டெங்-ஷியாஓ-பெங்கும் ராஜினாமாச் செய்து விட்டனர் என்று மாணவர் தரப்பில் தெரிவிக்கப்பட்டதாக ஆஸ்திரேலிய வானொலி தெரிவித்தது.

இதேவேளை — இரத்த ஆறு ஓடுவதைத் தவிர்க்கும்படி சீனாவிற்கு அமெரிக்கா அவசர வேண்டுகோள் விடுத்துள்ளது. (எ)

## மூன்றாவது முயற்சியில் சித்தி:

# 'அக்னி' வெற்றிகரமாக பரிசோதனை! ஏவுகணைதுறையில் இந்தியாசாதனை!!

புவனேஸ்வர், மே 22

இந்தியாவின் முதலாவது நடுத்தர அணு ஏவுகணை 'அக்னி' இன்று (திங்கள்) காலை வெற்றிகரமாக ஏவப்பட்டது.

ஒரிஸ்ஸா மாநிலத்தில் சண்டிப்பூர் பாலைவனப் பிரதேசத்தில் இருந்து 'அக்னி' ஏவப்பட்டது.

ஆயிரத்து 500 மைல் 'தூரம் பாய்ந்து சென்று எதிரிகளின் இலக்குகளைத் தாக்கும் வல்லமை பொருந்தியது 'அக்னி' ஏவுகணை.

காலை 7. 17மணிக்கு 'அக்னி' ஏவப்பட்டது. அந்தக் காட்சியை பாதுகாப்பு அமைச்சர் கிருஷ்ண சந்திரா பந்த், உள்துறை இணை அமைச்சர் திரு. சிந்தாமணி பாணிக்ரஹி பாதுகாப்பு அமைச்சின் விஞ்ஞான ஆலோசகர் டாக்டர் வி. எஸ். அருணாசலம் மற்றும் நூற்றுக்கணக்கான விஞ்ஞானிகள் புலனாய்வுத்துறை ஆராய்ச்சி அதிகாரிகள் ஆகியோரும் பார்வையிட்டனர்.

**வங்காளக் கடலில்..**

இந்த ஏவுகணை வங்காளக் கடலில் போய் விழுவதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அணுவாயுதத் துறையில் இந்தியவிஞ்ஞானிகள் அடைந்துள்ள வளர்ச்சியை 'அக்னி' பரிசோதனை காட்டுகிறது என்று அறிவிக்கப்பட்டது.

'அக்னி' ஏவுகணை ஏவப்பட்ட பிரதேசத்தில் வசித்து வந்த மக்கள் பாதுகாப்புக் கருதி தற்காலிகமாக வேறு இடங்களில் குடியமர்த்தப்பட்டனர். அவர்களுக்கு நிவாரணமும் வழங்கப்பட்டது.

**ஜனாதிபதி பாராட்டு**

சிம்லாவுக்கு உத்தியோக பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்த ஜனாதிபதி வெங்கடராமன் அங்கிருந்து, இச்சாதனையைப் புரிந்த விஞ்ஞானிகளைப் பாராட்டினார்.

இந்திய விஞ்ஞான வளர்ச்சியில் 'அக்னி' திட்டம் ஒரு மைல் கல்லாகும் என்று ஜனாதிபதி தனது பாராட்டில் தெரிவித்தார்.

**மூன்றாவது தடவை வெற்றி**

'அக்னி' முன்னர் இரண்டு தடவை ஏவப்படுவதற்கு திகதிகள் குறிக்கப்பட்டு இருந்தன. ஆனால் தொழில் நுட்பக் கோளாறுகள் காரணமாக இரண்டு முயற்சிகளும் ஒத்தி வைக்கப்பட்டன.

'அக்னி' ஏவுகணைப் பரிசோதனை குறித்து அமெரிக்கா தனது எதிர்ப்பை ஏற்கனவே வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (எ)

## இத்தாலி பிரதமர் இராஜினாமா

ரோம், மே 22

இத்தாலியின் பிரதமர் சிரியாகோடி மிற்றா கடந்த வெள்ளிக்கிழமை இராஜினாமாச்செய்தார்.

61 வயதான இவர் கிறிஸ்தவ ஜனநாயக கட்சியை சேர்ந்தவர்; கூட்டணி அரசில் அங்கம் வகிக்கும் சோசலிஸ்ட் கட்சியுடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டதன் காரணமாக இவரது இராஜினாமா இடம் பெற்றது.

இரண்டாவது உலகமாகயுத்தத்தின்பின்னர் இத்தாலியின் 48 ஆவது பிரதமர் என்ற பெருமை திரு. டி. மிற்றாவுக்குக் கிடைத்தது.

அரசியல் நெருக்கடிக்குத் தீர்வுகாணப்படும் வரை காபந்து பிரதமர் என்ற முறையில் பதவிவகிக்கும்படி திரு. டி. மிற்றாவை ஜனாதிபதி பிரான்சிஸ்கோ கொஸிகா கேட்டுக் கொண்டார். [எ]

## பாரதிதாசனின் பாரியார் காலமானார்

சென்னை, மே 22

பாவேந்தப் பாரதிதாசனின் மனைவியார் பழனியம்மாள் நேற்று பாண்டிச்சேரியில் காலமானார். அவருக்கு வயது 87.

பாரதிதாசனின் 100 ஆவது பிறந்த தின ஆண்டாக இவ்வருடம் கொண்டாடப்படுவது தெரிந்ததே. (ஒ-எ)

## வேண்டுகோள்

கைப்பற்றப்பட்ட அரபுப் பிரதேசத்தில் கொல்லப்படும் ஒவ்வொரு பலஸ்தீனியருக்கும் இஸ்ரவேலிய வீரர் ஒருவரையோ அல்லது யூதப் பிரசையையோ கொல்லும்படி தலைமறைவாக இயங்கும் பலஸ்தீன தீவிரவாத குழு ஒன்று வேண்டுகோள் விடுத்துள்ளது. (எ)

## அமெரிக்கா அச்சம்

வாஷிங்டன், மே 22

சீனாவுடன் சோவியத் யூனியன் மீண்டும் ராஜதந்திர உறவுகளை ஏற்படுத்தியிருப்பது குறித்து அமெரிக்கா அச்சம் தெரிவித்திருக்கிறது. (எ)

## பி. பி. சி. கண்டனம்

மாஸ்கோவில் இருந்து பி. பி. சி. செய்தியாளர் ஜெர்மி ஹரியை வெளியேற்றும் நடவடிக்கையை பி பி சி நிர்வாசம் கண்டித்திருக்கிறது. [எ]

# ஆலயம் தோறும் நூலகங்கள் அமைக்க வேண்டும்

## இந்து இளைஞர்பேரவை மாநாட்டில் உரை

யாழ்ப்பாணம், மே 23

அறிவு வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு ஆலயங்கள் தோறும் நூலகங்கள் அமைக்கப்பட வேண்டும்.

இப்படிக் கூறினார் ஆத்மஜோதி முத்தையா.

அகில இலங்கை இந்து இளைஞர் பேரவையின் 10 ஆவது மாநாட்டில் இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

மலையக இந்து இளைஞர் பேரவைத் தலைவர் திரு. எஸ். கணபதிப்பிள்ளை தலைமையில் நடந்த இந்நிகழ்ச்சியில் அவர் மேலும் கூறியதாவது:

'மகான்களின் சரித்திரங்களைப் பார்க்கும் போது அவர்கள் குருசிஷ்ய பரம்பரையில் வாழ்ந்தார்கள் இன்று எல்லோரும் குருவாக இருக்கிறார்களே தவிர சிஷ்யர்கள் இல்லை. இது தான் எம் சமயத்துக்கு வந்த பெரும் ஆபத்தாகும்.

ஒரு கிறிஸ்தவன் கிறிஸ்தவனாக ஞானஸ்நானம் பெறுகிறான். ஆனால் எம் சமயத்தில் சமயதீட்சையைப் பெற எவரும் முன்வரவில்லையே. எம் சமயத்தின் அத்திவாரம் சமய தீட்சை என்பதை எவரும் உணர்வதில்லை

இப்படி அவர் கூறினார்.

ஐ. தி. சம்பந்தர் பேசுகையில் கூறியதாவது

இன்று எம் ஆலயங்களை நல்ல முறையில் நிர்வகிக்க தொண்டர்களுக்கு தலைமைத்துவ பயிற்சி அளிக்கப்பட வேண்டும். அத்துடன் சைவ சமய ஆய்வுக்கு நல்ல சைவ நூல்கள் கொண்ட நூலகம் ஒன்று அமைக்கப்பட வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

கல்வி அதிகாரி திரு. வி. மகேசன் பேசுகையில் கூறியதாவது:

'கதைப்பதிலோ, அல்லது மாநாடு கூட்டித் தீர்மானம் எடுப்பதிலோ சமயத்தை வளர்க்க முடியாது. ஒவ்வொருவரும் ஸ்தாபனமாக இயங்க வேண்டும். பேசுவதில் காலத்தை கழிக்கிறார்களே தவிர செயல் வடிவில் ஒன்றும் இல்லையே.

பாடசாலைகள் தான் சைவக் கல்வி வளர்க்க சிறந்த இடம். அதிபர்கள், ஆசிரியர்கள் சைவசமயத்தவராக இருந்த போதும் வேற்று மதம் வளர்க்க அவர்கள் முனைகின்றார்கள். மாற்று சமயத்தின் ஆதரவாளராக இருக்கிறார்கள்.

இன்றைய இளைஞர்கள் சமயப்பணி என்று புறப்பட்டு தோல்வியடைய வேண்டாம். ஒவ்வொரு இளைஞனும் ஸ்தாபகனாக வளர வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

ஆசிரியர் சந்திரசேகரம் பேசுகையில் கூறியதாவது:

'ஆலயக் கிரியைகள், நடைமுறைகள் ஆகியவற்றில் மாற்றம் கொண்டு வரவேண்டும். இந்துகலாசார அமைச்சு மூலம் ஆலயங்கள் தோறும் ஓதுவார்கள் நியமிக்கப்பட வேண்டும். ஆலயங்களில் அமைதியைக் கொண்டு வர திருமுறைகள் ஒலிக்க வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

மற்றும் செந்தூர்ராசா, கு. பரராஜசிங்கம், என், சிவரஞ்சன் உட்படப்பலர் உரையாற்றினார்கள். (இ-3)

# இளைஞருக்கு சரியான பாதை காட்டுவது கல்விமான் கடமை

## மலரை வெளியிட்டு வைத்து உரை

யாழ்ப்பாணம், மே 23

இன்றுள்ள காலகட்டத்தில் எம் சமயம் பெரும் இக்கட்டான நிலையில் இருப்பதை இளைஞர்கள் உணருகின்றார்கள். அவர்களுக்கு சரியான பாதையைக் காட்டவேண்டியது கல்விமான்களின் பாரிய பொறுப்பாகும்.

யாழ் பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத் தலைவர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன் மேற்கண்டவாறு கூறினார்.

அகில இலங்கை இந்து இளைஞர் மன்ற பத்தாவது ஆண்டு மாநாட்டில் "இந்து இளைஞன்" மலரை வெளியிட்டு வைத்து அவர் உரையாற்றினார்.

முதற் பிரதியை பெற்றுக் கொண்ட பின் உரையாற்றிய கலாநிதி மேலும் கூறியதாவது;

"சமயத்தை அடித்தளமாமாகக் கொண்டு விளங்குவதால் எமது நாகரிகம் இந்து நாகரிகம் என வழங்கப்படுகிறது. எத்தகைய தாக்குதல்களினாலும் சின்னாபின்னப்படாமலும், [illegible] தால் அழியாமலும், காலத்தின் தன்மைக்கேற்ப புதிய சிந்தனைகளோடு வளர்ச்சி பெற்று வருவது இந்து நாகரிகம். தென் ஆசியப் பிராந்தியத்தில் இந்து நாகரிகம் தனக்கேயுரிய வரலாற்றுப் பெருமையும். சிறப்பும் பெற்றது. இத்தகைய சிறப்பினால் மேலை நாட்டவர்களும் பெரிதும் கவரப்பட்டனர் —

இப்படி அவர் கூறினார்.

சைவப் புலவர் க.சி. குலரத்தினம் பேசுகையில்; '56ஆம் ஆண்டுதான் சிங்கள மொழி ஆட்சியேறியது. ஆனால் தமிழ் மொழி பலயுக காலமாக வர்த்தக மொழியாக விளங்கியது. வர்த்தகப் பேட்டை என்ற சொல் இன்று 'பெற்றா' என்று மாறியுள்ளது ஓர் உதாரணம்.

"சைவம், தமிழ், பண் ஆகியன ஒன்றிணைந்து வாழ்கின்றன. எவராலும் அவற்றை அழிக்கமுடியாது, அவை அழியவும் இல்லை" என்றார்.

திருமலை பேரவையைச் சேர்ந்தசெ. சிவபாதசுந்தரம், எஸ். சுந்தரலிங்கம் தில்லைநாதன் கலாநிதி மோகனதாஸ் யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் க. நாகேஸ்வரன் உட்படப் பலர் உரையாற்றினர். மலர் ஆசிரியர் திரு. எஸ். [illegible] கூறினார். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜூன் 5 ஆம் திகதி தொடங்கும்

# நாகபூஷணி அம்பாள் உற்சவம்: ஏற்பாடுகளை ஆராய நாளை கூட்டம்

அனலைதீவு, மே 23

நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் ஜூன் 5 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினைந்து தினங்கள் நடைபெறும்.

வழமைபோல் யாத்திரிகர்களின் நலன்கருதி சுகாதாரம், பாதுகாப்பு, போக்குவரத்து, குடிதண்ணீர் விநியோகம், மின்சாரவசதி முதலியவற்றை ஒழுங்கு செய்வதற்கு எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகளைத் தீர்மானிப்பதற்காக நாளை புதன்கிழமை முற்பகல் 10-00 மணிக்கு கூட்டம் ஒன்று நடைபெறும்.

கூட்டம் வேலணை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெறும்.

கூட்டத்தில் அவ்வப் பகுதி அரசாங்க அதிகாரிகளையும், இலங்கைப் போக்குவரத்துச் சபையினரையும் பங்கு பற்றுமாறு கோரப்பட்டுள்ளது. (இ-18)

## மெமோறியல் தமிழ்த் தினவிழா

யாழ்ப்பாணம், மே 23

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் சென்ற திங்கட்கிழமை நடைபெறவிருந்த தமிழ்த்தின விழா நாளை புதன்கிழமை நடைபெறும்.

விழாவில் வட்டாரக்கல்வி அதிகாரி குலசேகரம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

பேச்சுப் போட்டிகள், கவிதைப் போட்டிகள், நாடகங்கள் என்பன இடம்பெறும். (இ)

## ஆய்வுரை

யாழ்ப்பாணம், மே 23

"கந்தபுராணம்—ஆய்வுக்கு ஆற்றுப்படுத்தி நிற்கும் ஓர் ஆய்வு நோக்கு" என்ற தலைப்பில் எதிர்வரும் 26 ஆம் திகதி பி. ப. 2-30 மணிக்கு யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி நா சுப்பிரமணியன் ஆய்வுரை நிகழ்த்துவார்.

ஈவ்லின் இரத்தினம் பல்லினப் பண்பாட்டியல் நிறுவன கருத்தரங்கு தொடரில் இது நடைபெறுகிறது. (இ-3)

## புதிதாக மத்தியஸ்தர்கள்

யாழ்ப்பாணம், மே 23

யாழ். கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத்தில் புதிதாக மத்தியஸ்தர்கள் சேர்த்துக் கொள்ளப்பட உள்ளனர்.

புதிய மத்தியஸ்தர் தெரிவுப் பரீட்சைக்கான முன்னோடிப் பயிற்சி வகுப்புகள் எதிர்வரும் 27ஆம் திகதி சனிக்கிழமை முதல் நடைபெறவுள்ளன.

இந்தப் பயிற்சி வகுப்பில் பங்குகொள்ள விரும்புவோர் அன்றைபதினம் 10 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரிக்குச் சமூகம் தருமாறு யாழ் கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்க செயலாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ-6)

### சமய சந்நிதிகளில்

## பொங்கல் உற்சவம்

யாழ்ப்பாணம், மே 23

தெல்லிப்பழை மேற்கு விழிசிட்டி வீரசிட்டி சிவகுருநாத சுவாமி கோவிலில் 25 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7 மணி அளவில் வருடாந்தப் பொங்கல் உற்சவம் நடைபெறும். [க]

## வரியப்புலம் அம்மன் கோயில் சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், மே 23

சுன்னாகம் வரியப்புலம் ஸ்ரீ கோமாரி அம்பாள் தேவஸ்தானத்தின் சங்காபிஷேகம் நாளை 24 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறும்.

காலையில் அளவையூர் நாதஸ்வரச் சக்கரவர்த்தி என். கே. பத்மநாதன் கோஷ்டியினரின் கச்சேரி விசேஷ நிகழ்ச்சியாகநடைபெறும். மாலையில் சிறப்புசொற்பொழிவுகள் இடம்பெறும். (க)

ஜோண்சன் Johnson
[10 H. P]
வெளியிணை இயந்திரங்களையும், உதிரிப் பாகங்களையும் மலிவு விலையில் வட பகுதியில் கொள்வனவு செய்ய நம்பிக்கையான ஒரே இடம் :

செள். அன்ரனீஸ்
40, கடற்கரை வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்

உதயன்

23 - 05 - 1989 செவ்வாய்க்கிழமை

கடற்றொழிலாளர்களே!
3/4 மில்லி மீற்றர் ரேலர் மடி, முக்கால், ஒன்று, ஒன்றரை, இரண்டு மில்லி மீற்றர் ரேலர் மடி நூல் வகைகள்- போயா, வலை நூல் வகைகள்- கடற்றொழில் உபகரணங்கள் எதுவாகினும் தெரிவு செய்ய நாட வேண்டிய ஒரே ஸ்தாபனம்;

செள். அன்ரனீஸ்
40, கடற்கரை வீதி,
குருநகர் - யாழ்ப்பாணம்

கல்விப் பகுதி அபிவிருத்தியில் ஈடுபட

# கோட்டக் கல்வி அலுவலகங்கள் திறம்பட இயங்க வேண்டும்

## அலுவலகத் திறப்பு விழாவில் பேச்சு

யாழ்ப்பாணம், மே 23

''எமது ஆசிரியர்கள் சுமுகமான நிலைமையில் மன நிறைவோடு கடமை செய்வதற்கான சூழ்நிலையை ஏற்படுத்த கோட்டக் கல்வி அலுவலகங்கள் வழிவகுக்கும். கோட்டக் கல்வி அலுவலகங்கள் திறமையாகச் செயற்பட்டால் கல்விப் பகுதி அபிவிருத்தி வேலைகளில் முழுக் கவனத்தையும் செலுத்த முடியும்''.

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்கள வளவில் யாழ். கோட்டக் கல்வி அலுவலகத்தைத் திறந்து வைத்து உரையாற்றுகையில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி திலகவதி பெரியதம்பி மேற்கண்டவாறு கூறினர்.

விழாவுக்கு கல்வி அதிகாரி திரு. இ. சிவானந்தன் தலைமை வகித்தார்.

நேற்றுக் காலை நடைபெற்ற யாழ். கோட்டக் கல்வி அலுவலகத் திறப்பு விழா ஆரம்பிப்பதற்கு முன்பதாகப், பிரதம கல்வி அதிகாரி திரு. கே. கந்தசாமி கோட்டக் கல்வி அலுவலகப் பெயர்ப் பலகையைத் திறந்து வைத்தார்.

இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் மத குருமார்கள் விழாவிற்குச் சமுகம் கொடுத்து ஆசியுரை வழங்கினர்கள்.

யாழ். கோட்டக் கல்வி அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ள கல்வி அதிகாரி திரு. சி. தியாகராசா, கல்வி அதிகாரி திரு. கே. மகேசன், சாவகச்சேரி வடக்கு கோட்டக் கல்வி அதிகாரி திரு. பி. குகதாசன் ஆகியோர் சிறப்புரை வழங்கினர்கள். (ச)

## மலையக இளைஞர் முன்னணி அமைப்பாளர் கடத்தப்பட்டார்

கொழும்பு, மே 23

ஹட்டன் பிரதேச மலையக இளைஞர் முன்னணியின் அமைப்பாளர் திரு. ஆர். எஸ். சந்திரசேகரன் டிக்கோயா நகரில் உள்ள அவரது வீட்டில் இருந்து கடத்தப்பட்டார்.

காலை 7.30 மணியளவில் கடத்தப்பட்ட அவர் அன்று இரவு 9 மணியளவில் விடுவிக்கப்பட்டார் என்று முன்னணி வட்டாரங்கள் தெரிவித்தன.

15 பேரைக் கொண்ட கோஷ்டி ஒன்று சந்திரசேகரனின் கண்களைக் கட்டி வான் ஒன்றில் கடத்திச் சென்றதாம்.

சனநடமாட்டம் இல்லாத பகுதியில் இவர் விசாரணைக் குட்படுத்தப்பட்டதுடன் தாக்கப்பட்டாராம். அதன் பின்னர் அவரை மீண்டும் வீட்டில் கொண்டு போய் அக் கோஷ்டி இறக்கிவிட்டுச் சென்றதாம். (ஒ-எ)

## பெண்ணிடம் ஹெரோயின்!

கொழும்பு, மே 23

கடந்த சனிக்கிழமை இரவு கட்டுநாயக்கா விமான நிலையத்தில் ஹெரோயின் கடத்தி வந்த ஒரு பெண்ணை போதை வஸ்துத் தடுப்பு இயக்கப் பொலிஸார் கைதுசெய்தனர்.

சென்னையில் இருந்து வந்த இப்பெண் தனது உள்ளாடையில் 46 கிராம் ஹெரோயினை ஒழித்துவைத்திருந்தது கண்டு பிடிக்கப்பட்டது. அதன்பெறுமதி 2 லட்சத்து 30 ஆயிரம் ரூபா என்று தெரிவிக்கப்பட்டது. [ஒ.எ)

## 4 ஜவான்கள் உயிரிழப்பு

கொழும்பு, மே 23

வவுனியா, கனகராயன் குளத்தில் கடந்த வெள்ளிக்கிழமை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் நடத்திய நிலக் கண்ணி வெடித் தாக்குதலில் இந்திய அமைதிப் படையைச் சேர்ந்த வாகனம் ஒன்று சிக்கிச் சேதமுற்றதாக அறிவிக்கப்பட்டது.

அப்போது இந்திய அமைதிப் படையைச் சேர்ந்த 4 ஜவான்கள் கொல்லப்பட்டனர்; மூவர் காயமடைந்தனர். (ஒ-எ)

## ஒன்பது குழந்தைகளை பெற்ற தாய்!

தெஹ்ரான், மே 23

ஈரானில் பெண்மணி ஒருவர் ஒரே தடவையில் ஒன்பது பிள்ளைகளைப் பெற்றெடுத்து உள்ளார்.

ஒன்பது குழந்தைகளும் இறந்தே பிறந்தன.

இவர் கர்ப்பம் தரித்து ஐந்து மாதங்களில் பிரசவவேதனை கண்டு இந்தப் பிள்ளைகளைப் பெற்றுள்ளார்.

பிரஸ்தாப பெண்மணி திருமணமாகி ஆறு வருடங்களாக பிள்ளைகள் இல்லாது இருந்தார். அதன் பின்னர் முதற் பிரசவத்தில் இந்த ஒன்பது பிள்ளைகளும் பிறந்தன.

கர்ப்பம் தரிப்பதற்கென மாத்திரைகள் சிலவற்றை உட்கொண்டதன் பயனாகவே இவர் இந்தக் குழந்தைகளைப் பெற்றெடுத்தார் எனக் கூறப்பட்டது. (ஒ-9)

சீன கம்யூ. கட்சியின் செயலாளர்

## ஷாஓ ஸியாங்கின் பதவி பறிக்கப்பட்டு விட்டது!

பீகிங், மே 23

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியில் இருந்து ஷாஓ ஸியாங் விலக்கப்பட்டார்.

அவரின் இடத்திற்கு திரு. கியாஓ ஷி நியமிக்கப்படுவார் என்று தெரியவருகிறது.

சீனமாணவர் ஆர்ப்பாட்டத்துக்கு ஆதரவளித்ததற்காக திரு. ஸியாங்கை பதவியில் இருந்து விலக்குவது என்று கடந்த வெள்ளிக்கிழமை நடந்த அரசியல் குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதாகத் தெரிகிறது.

இதன் பின்னர் திரு. ஷாஓ ஸியாங் பகிரங்கமாக வெளிப்படவில்லை.

5 உறுப்பினர்களில் 4 பேர் அவரைப் பதவி விலக்கும் தீர்மானத்துக்கு ஆதரவளித்தனர்

69 வயதான திரு. ஷாஓ 1987 ஜனவரியில் கட்சிப் பதில் தலைவராக நியமிக்கப்பட்டார். 1987 அக்டோபரில் பிரதமர் பதவியை திரு. லீபெங்குக்கு விட்டுக்கொடுத்த பின்னர், கட்சித் தலைவராக அவர் உறுதிப்படுத்தப்பட்டார். (ஒ-எ)

## திருமுறை மாநாடு இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், மே 23

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி இந்து இளைஞர் கழகம் நடத்தும் திருமுறை மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் யாழ் இந்துக்கல்லூரி ஆசிரியர் திரு. சே. சிவராஜா தலைமையில் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் இன்று காலை 8. 30 மணிக்கு ஆரம்பமாகும்.

கல்லூரி உப அதிபர் திரு. பொன். மகேந்திரன் மங்கல விளக்கேற்றி நிகழ்ச்சியை ஆரம்பித்து வைப்பார்

கல்வி அதிகாரி திரு. எஸ். சிவநாயகமூர்த்தி ஆசியுரையும், வைத்தீஸ்வர வித்தியாலய அதிபர் திரு. சிவ. சரணபவன் (சிற்பி) வாழ்த்துரையும் கல்லூரி ஆசிரியர் கழகத் தலைவர், திரு. ஆர். இராஜகோபால் வரவேற்புரையும் நிகழ்த்துவர்.

கல்லூரி உயர்தர வகுப்பு மாணவன் பா. கேதீஸ்வரன் இளைப்பாறிய அதிபர் பண்டிதர் வித்துவான் சைவப் புலவர் திரு இ. திருநாவுக்கரசு ''மில்க்வைற்'' செய்தி ஆசிரியர் திரு. கா.சி குலரத்தினம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

யாழ் இந்துக்கல்லூரி மாணவர்கள் மற்றும் யாழ் இந்து மகளிர் கல்லூரி மாணவிகள் பண்ணிசை பாடுவார்கள்.

இந்து இளைஞர் கழக மாணவ தலைவர் செல்வன் அ. சுதர்சன் நன்றியுரை நிகழ்த்துவார். (உ)

## கரணவாயில் தொடர்ந்து பதற்றம்

கடந்த ஞாயிற்றுக்கிழமை கரணவாய்ப் பகுதியில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தை அடுத்து அங்கு தொடர்ந்து பதற்றம் நிலவுகிறது.

ஒரு சில பகுதிகளைச் சேர்ந்த மக்கள் அங்கிருந்துவெளியேறிவிட்டனர் எனத் தெரியவருகிறது.

அப்பகுதியிலுள்ள இரு வீடுகள் தகர்க்கப்பட்டதாகவும் கூறப்பட்டது. எஸ். சிவக்கொழுந்து. எஸ். இரத்தினம் ஆகிய இருவருமே, தகர்க்கப்பட்ட வீடுகளின் உரிமையாளர்கள் ஆவர். இவர்கள் இருவரும் சகோதரர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை ஆலயங்களில் தஞ்சமடைந்த மக்கள் தொடர்ந்தும் அங்கேயே இருக்கின்றனர்.

மக்கள் வெளியேறிய பகுதியிலுள்ள வீடுகளில் இருந்து பொருள்கள் மறைவதாகவும் புகார் கூறப்படுகிறது. (ஒ_160-70)

## வழக்கம்பரைவாசி சுட்டுக்கொலை

சுழிபுரம், மே 23

தொல்புரம், சின்னம்மன் கோவிலுக்குச் சமீபமாகவுள்ள மூளாய் - காரைநகர் வீதியில் வழக்கம்பரையைச் சேர்ந்த ஒருவர் சூட்டுக் காயங்களுடன் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

கொலையுண்டவர் என். பாலா (வயது 60) எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-28-10)

## திரைப்பட இறக்குமதி...!

இலங்கை தேசியத் திரைப்படக் கூட்டுத்தாபனமே இனி நேரடியாக திரைப்படங்களை இறக்குமதி செய்யப்போகிறது

இது சம்பந்தமாக முடிவு செய்யப்பட்டு விட்டதாக கூட்டுத்தாபனத் தலைவர் திரு, டபிள்யு. ஜே. பெர்னண்டோ சொன்னர்.

முகவர் மூலமாக அல்லாது நேரடியாக திரைப்படங்களைக் கூட்டுத்தாபனம் இறக்குமதி செய்யும்.

திரைப்படங்களின் இறக்குமதி சம்பந்தமாக முகவர்கள் ஏற்கனவே செய்துகொண்ட ஒப்பந்தங்கள் குறித்து கூட்டுத்தாபனம் பு தாகப் பேச்சுக்களை நடத்தும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-எ)

மாகாண சபைகள் சட்டத் திருத்தம்

## சுதந்திரக் கட்சி எதிர்ப்பு இயக்கம் ?

கொழும்பு, மே 23

மாகாணசபைகள் சட்ட மூலத்தை எதிர்த்து ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி எதிர்ப்பு இயக்கம் ஒன்றை நடத்த இருப்பதாக கட்சி வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

இதேவேளை சுதந்திரக்கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் நாளை புதன்கிழமை கூடுகிறது.

மாகாணசபை சட்டத்திருத்தச் சட்டமூலம் மீண்டும் இம்மாதம் 25ஆம் திகதி (வியாழன்) நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு வரும்போது எடுக்கவேண்டிய நடவடிக்கை என்ன? என்பது பற்றி இக் கூட்டத்தில் ஆராயப்படும் என்று தெரிகிறது.

திருத்தச் சட்டமூலத்தை எதிர்த்து எதிர்ப்பு இயக்கம் ஒன்றை நாடாளுமன்றத்திற்கு வெளியே நடத்துவது பற்றியும் இக்கூட்டத்தில் ஆராயப்படலாம் என்று சுதந்திரக் கட்சி உதவிச் செயலாளர் திரு: கருணரத்ன தெரிவித்தார். [ஒ-எ

## யாழ். பாடசாலை --

கல்வித் திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவர் பின்வருமாறு தகவல் தந்தார்.

மதிய போசனத் திட்டத்திற்கென நமக்கு நாளொன்றுக்கு 6 லட்சம் ரூபா செலவாகிறது. அதன்படி மத்திய அரசு எமக்கு நிதி வழங்க முன் வந்துள்ளது'

ஆனல் மதிய போசனத் திட்டத்தை ஆரம்பிக்கவும், அதனல் ஏற்படும் பராமரிப்பு, விநியோக சிரமங்களை கருத்திற் கொண்டு பல அதிபர்கள், ஆசிரியர்கள் தயக்கம் காட்டி வருகின்றனர். இதனல் மத்திய அரசிற்கு லட்சக் கணக்கான பணம் இலாபமாகிறது. எனவே உடனடியாக அனைத்து பாடசாலைகளும் மதிய உணவு திட்டத்தை ஆரம்பிக்க வேண்டும்- என்றுர் (அ-ஒ-9)

## கிரிக்கெட் ஆட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மே 23

'ஷப்ரு' கிண்ணத்திற்காக ஜொலிஸ்ராஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் போட்டியின் நேற்றைய அரை இறுதி ஆட்டங்கள் மழை காரணமாக இடை நிறுத்தப் பட்டு ஒத்திவைக்கப்பட்டன.

நேற்றைய முதலாவது அரையிறுதி ஆட்டத்தின் ஒன்பதாவது ஓவர் முடிவில் சென்றலைற்ஸ் வி. க நீல அணிக்கெதிராக துடுப்பெடுத்தாடிய ஷப்ரு அணி விக்கெட் இழப்பின்றி 37 ஓட்டங்களைப்பெற்றிருந்தபோது மழை காரணமாக ஆட்டம் இடை நிறுத்தப்பட்டது.

பின்னர் நேற்று நடைபெறவிருந்த இரண்டு அரை இறுதியாட்டங்களும் எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டன (ஒ)

## நகரில் நேற்று....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி]

செல்லப்பட்டன. யானை ஒன்றும் ஊர்வலத்தில் வந்தது.

பக்திமயமாக இருந்த ஊர்வலம் சிறிதுநேரம் பிள்ளையார் ஆலயத்தில் தங்கி, ஊர்வலம் காங்கேசன்துறை வீதி வழியாக கல்லூரியை வந்தடைந்து ஞான வைரவர் ஆலயத்தில் விசேட பூசை, ஆராதனைகள் இடம்பெற்று, குமாரசாமி மண்டபத்தை அடைந்தது.

கொடிக்கவியை செல்வன் இ குகானந்தன் இசைக்க, கல்லூரியின் மூத்த மாணவன் திரு. ந.ம. சிவப்பிரகாசம் நந்திக் கொடியையும், கல்லூரி அதிபர் திரு. ச. பொன்னம்பலம் கல்லூரிக் கொடியையும் ஏற்றினர்கள்.

தொடர்ந்து கல்லூரி அதிபர் திரு. பொன்னம்பலம் தலைமையில் திருமுறை மாநாடு நடைபெற்றது. (ஒ)

## இலங்கை - இந்திய . . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வும் சொல்லப்படுகிறது.

தமிழ்ப் பகுதிகளில், இந்தியாவின் அனுசரணை இல்லாமல் இலங்கைப் படைகள் செயற்படத் தொடங்குவது. ஒப்பந்தத்துக்கு முரணனநடைமுறையாக அமையும் என்று இந்தியத் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டு ஆராயப்பட்டுள்ளதாகவும் அறிய வருகிறது.

இதேவேளை, அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில்பேச்சுக்கள் தொடங்கிய பின்னர் அமைதிப்படையினர் தமது இராணுவ நடவடிக்கைகளை அதிகரித்திருப்பது குறித்து இலங்கை அரசு வட்டாரங்களில் அதிருப்தி நிலவுவதாகவும் சொல்லப்படுகிறது.

இதேவேளை ஏஜன்சிச்செய்தி ஒன்று இலங்கை-இந்திய விரிசல் நிலைகுறித்து பின்வருமாறு தெரிவித்திருக்கிறது:-

இலங்கை அரசு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் நடத்தும் பேச்சுவார்த்தையால் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே வெளிப்படையான பிரிவு ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

இலங்கை அரசு - தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஆகியவற்றுக்கு இடையே நடத்தும் பேச்சுக்கள் பற்றி இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகத்திடம் கூறுதது பற்றி இந்தியத் தூதர் கவலை தெரிவித்திருந்தார் —

இதைத் தொடர்ந்து, இலங்கை வெளியுறவு அமைச்சகம் பதில் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது —

அந்த அறிக்கையில் இந்தியத் தூதரகஅறிக்கையில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது துரதிஷ்டமானது என்று கூறப்பட்டிருந்தது —

அது இந்தியாவின் போக்குக்குறித்து இலங்கைக்கு அதிருப்தி ஏற்பட்டதையே எடுத்துக் காட்டுகிறது—என்பதாகும். (அ-எ)

## வவுனியா....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த தாக்குதலின் போது 60 எம். எம். மோட்டார், 30 கலிபர் துப்பாக்கி, ஜி-3 ஏ. கே. எம். எஸ்., ரி- 56 மோட்டார் ஷெல், தொலைத் தொடர்புச் சாதனம் உட்பட பல பொருள்கள் தங்களால் கைப்பற்றப்பட்டதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## விபத்தில்...,

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிய நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மரணமானவர் மானிப்பாய் சின்னத்தம்பி லேனைச் சேர்ந்த நடராசா அருள்ராஜ் (வயது16) என்று அடையாளம் காணப்பட்டார்.

இவர் மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவனுவார்.

காயமடைந்தவர் யாழ்ப்பாணம் ஆசீர்வாதம் லேனைச் சேர்ந்த பத்மநாதன் அன்ரன் (வயது 17) (ஒ-10-51)


காணவில்லை

அம்பலவன் பொக்கணையைச் சேர்ந்த (குண்டு என்று அழைக்கப்படும்) கிருஷ்ணதாசன் (வயது 25) கடந்த 16-05-89 அன்று முள்ளியவளையில் காணமற் போய் விட்டார், வேறு துணையின்றி இவரது மனைவி, மகள், ஆறுமாதக் குழந்தை உட்பட தாய், சகோதரிகள் தவித்து நிற்கிறார்கள். சம்பந்தப்பட்டவர்கள் இவரை மனிதாபிமானத்துடன் விடுவித்து உதவும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

தகவல் :
இவரை நம்பியிருக்கும்,
மனைவி, மகள்.

(11030)

31ஆம் நாள் நினைவஞ்சலி



செல்வன் R. சண்முகராஜா
(சண் Shan)
[ரதிவோச் நிர்வாகஸ்தர்]

அன்னையின் மடியில் : 02-10-1961
ஆண்டவன் அடியில் : 23-04-1989

அன்பிற்கும் பண்பிற்கும் உறைவிடமாய்
எம் இதயங்களில் அழியாதவராய்
இரங்கும் இதயமுடையவராய்
ஈசனுக்குரியவராய் உலகிற்கு உத்தமராய்
வாழ்ந்து திடீரென மறைந்து
வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும்
தெய்வத்தின் திருவடி சேர்ந்தார்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கிறேம்.

உன் அன்பால் வாடும்
க சேனுதிராசா குடும்பத்தினர்.

(11028)

OBITUARY

P. J. Emmanuel Arumainayagam
(Retired Executive Officer, Walker & Greig)

Son of Late Mr. & Mrs. Pavilupillai beloved husband of Mariammah loving father of Annette Vasantha, Suwarna, Nirmala, Narendran (Faculty of Science, University of Jaffna), Kulendran (Faculty of Engineering, University of Peradeniya), brother of Mr. B. P. A. Thambinayagam (Retired A.G.A., U. K.), Mr. P. Thevanayagam (T. O., Batticaloa), Mrs. Ratnam Chellaiah, Miss Poobahiyam and Mrs. Pushpam Antonipillai, brother - in - law of Mr. N. Rayappu, Mr. N. Antonipillai (Ex-M.M.C.) and Mrs. G. Balendra, Expired. Cortage Leaving Residence Marisankudal, Ilavalai on 24th Wednesday at 9 a.m. for Cremation at St. Anne's Cemetery Ilavalai.

Wife & Children

(655)

மரண அறிவித்தல்

திரு. நாகன் - சரவணை (சாமியார்)

பிரபல விஷகடி வைத்தியரும், காளிதேவி பூசகருமாகிய திரு. நாகன் - சரவணை அவர்கள் 18-05-1989 அன்று சிவபதமடைந்துவிட்டார்.

இவ் அறிவித்தலை உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேம்.

தகவல்:
மனைவி

காளி கோவில்,
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

[661]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 392/2 இல் உள்ள அச்சகத்தில் 23—05—1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது